சுத்தத்திற்கும் சுவைக்கும்
புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்
தேவி விலாஸ்
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு.
சைவ போசனகாரர்
மனதில் என்றும்
தேவி விலாஸ்
(வண்ணைச் சிவன்கோவில்
சந்தி)
888, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

மக்கள் நாளிதழ் 8

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 21 சித்திரை 27 ஜு-ஆகிர் 23 இதழ் 89
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 9-5-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980 - 5 - 9
PERIODICALS
DIVISION
LIBRARY

## தீ விபத்து!

திண்டுக்கல், மே 8
உத்தரப்பிரதேசத்தில் திண்டுக்கல் என்னும் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 85 பேர் கருகி மாண்டனர்.
இக்கிராமத்தில் உள்ள வீட்டின் அடுப்பிலிருந்து பறந்த தீ அவ்வீட்டில் பற்றியதை யடுத்து முழுக்கிராமத்திற்குமே அது பரவியது.
கிராமம் முழுவதும் தீ பரவிய போது இக்கிராமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தமது உயிரையும் மதியாது பல குழந்தைகளையும் பெண்களையும் காப்பாற்றினர். (கு)

# மக்கள் கதறியழ, தலைவர்கள் அஞ்சலியுடன்

# டிட்டோ பூதவுடல் அடக்கம்!

## சுகவீனமுற்ற நிலையிலும் பிரஷ்னேவ் நேரில் அஞ்சலி

பெல்கிரேட், மே 8
நவீன யூகோஸ்லாவியாவின் சிற்பியும் உலகத் தலைவர்களின் பெருமதிப்பைப் பெற்றிருந்தவருமான அமரர் மார்ஷல் டிட்டோவின் பூதவுடல் நேற்றிரவு பெல்கிரேட்டிலுள்ள அவரது வாசஸ்தல வளவினுள் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நூறுக்கும் அதிகமான நாடுகளிலிருந்து பெருந்தொகையான தலைவர்கள் உட்பட சுமார் 5 லட்சம் யூகோஸ்லாவிய மக்களும் நேற்று நடைபெற்ற இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்கள்.

கடந்த மூன்று நாட்களாக பெல்கிரேடில் பாராளுமன்றக் கட்டிடத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த அமரரின் பூதவுடலை 8 ஜெனரல்கள் தாங்கிவந்து, ஆயுதம் தாங்கிய வண்டியில் வைத்தனர். அங்கிருந்து சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அவரது வாசஸ்தலத்திற்குப் பூதவுடல் கொண்டு செல்லப்பட்டபோது மக்கள் கண்ணீர் விட்டுப் புலம்பிய வண்ணம் நடந்துசென்றனர்.

நான்கு மணித்தியாலங்கள் நடைபெற்ற இறுதிக்கிரியைகளின் பின்னர், மரியாதைக் குண்டுகள் வானைப் பிளக்க, மக்களின் புலம்பல் ஒலியின் மத்தியில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பொது வைபவம் எதிலுமே கலந்துகொள்ளாதிருந்த டிட்டோ அம்மையாரும், அமரர் டிட்டோவின் இரண்டு புதல்வர்களும் கண்ணீர் ததும்ப இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டனர்.

உலகப் பெருந்தலைவர்களில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்த சோவியத் அதிபர் திரு. பிரஷ்னேவ், உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தமையால் கதிரையொன்றில் அமர்ந்திருந்தவாறு கிரியைகளைப் பார்வையிட்டார்.

எதிர்பார்க்கப்பட்டலும் பார்க்க பெருந்தொகையான தலைவர்கள் பெல்கிரேட்டில் கூடியிருந்தனர். 30 ஜனாதிபதிகள், 20 பிரதமர்கள், 6 மன்னர்கள், 846 மந்திரிகள் உட்பட பெருந்தொகை தலைவர்கள் மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

இலங்கையிலிருந்து ஜனாதிபதியின் சார்பில் வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீட்டும், சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் கலந்துகொண்டனர். (கு)

## கியூபா அதிபர் காஸ்ட்ரோ கலந்துகொள்ளவில்லை

பெல்கிரேட், மே 8
அணிசேரா இயக்கத்தின் அமைப்பாளர்களில் முக்கிய பங்கை வகித்தவரான அமரர் மார்ஷல் டிட்டோவின் இறுதிக் கிரியைகளில் இயக்கத்தின் தற்போதைய தலைவர் கியூபா ஜனாதிபதி திரு. பிடல் காஸ்ட்ரோ கலந்துகொள்ளவில்லை.

உள்நாட்டில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை காரணமாகவே அவர் கலந்துகொள்ளவில்லை யாகினும் அவரது சார்பில் உதவி ஜனாதிபதி கலந்து கொண்டார். (கு)

## ஆனமடுவ புதிய எம். பி. சபையில் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)
நேற்று முன்தினம் நடைபெற்ற ஆனமடுவ இடைத்தேர்தலில் 1787 பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த திரு. அசோகா வடிவமங்காவ நேற்றுப் பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

பாராளுமன்றம் நேற்றுக் கூடியபோது பெருந்தொகையான ஆதரவாளர்களுடன் திரு. அசோகா வடிவமங்காவ வந்திருந்தார்.

சபையின் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது தம்மைத் தெரிவுசெய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். அவர் தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது:

"என்னைத் தெரிவுசெய்த ஆனமடுவத்தொகுதி மக்களின் வாழ்வில் ஒளிமயமான எதிர்காலம் ஒன்றைத் தோற்றுவிக்க ஜனாதிபதியினதும் பிரதமரினதும் உதவியைப் பெற முடிவேன்.

"இளைஞரான எனக்கு இந்த உயர்ந்த சபைக்கு வர உதவிய ஐக்கிய தேசியக்கட்சிக்கும் எனது நன்றிகள்" என்றார். (ம-கு)

## ஆனையிறவில் நடமாடும் கச்சேரி

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு கடல் ஏரியில் உள்ள நீரை நன்னீராக்கி, அதனை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதுபற்றி ஆராய்வதற்காக யாழ். மாவட்ட அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவொன்று இன்று காலை அப்பகுதிகளுக்குச் செல்லுகின்றது.

யாழ்ப்பாண மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் செல்லும் இக்குழுவினர் நடமாடும் செயலகம் ஒன்றையும் இன்று காலை நடாத்துவர். (செ-கு)

லண்டன் தூதரக முற்றுகை நாடகம்

## ஈரானிய தீவிரவாதி மீது கொலைக்குற்றச்சாட்டு!

லண்டன், மே 8
லண்டனில் ஈரானியத் தூதரகத்தைக் கைப்பற்றிய ஈரானியத் தீவிரவாதிகளில், உயிருடன் கைதுசெய்யப்பட்ட ஒரேயொரு தீவிரவாதி இன்று கொலைக்குற்றச்சாட்டின்பேரில் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

ஈரானின் தெற்கு மாநிலத் துறைமுகத் தொழிலாளரான பௌசி மேச்சர் என்ற இத்தீவிரவாதி மீது பணயக்கைதிகளில் இருவரைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஆதரகம் கைப்பற்றப்பட்டபோது, அங்கு கடமையில் இருந்த பத்திரிகைத் தொடர்பு உத்தியோகத்தர் ஒருவரும், இப்பகுதியின் பகுதிநேர ஊழியரான மாணவர் ஒருவரையும் கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கொலைக்குற்றஞ் சாட்டப்பட்ட ஈரானியத் தீவிரவாதி நீதிமன்றத்திற்குப் பலத்த பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டார். ஒருவார காலம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, மறுவாரம் லம்பட் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணித்தார். (கு)

விவசாய இரசாயனப் பொருட்கள்
ஹெக்கெம் ஸ்தாபனத்தாரின் கிருமிநாசினிகள்
மொத்த விற்பனைகளுக்கு விசேஷ கழிவுகள்
வழங்கப்படும்
சிவாஸ்
206, முதலாம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்.
5708

யாழ். ஆஸ்பத்திரிக் கொலை:

# அடையாள அணிவகுப்புக்கு பொலிசார் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)
யாழ் பெரியாஸ்பத்திரி கொலை தொடர்பான அடையாள அணிவகுப்பு, பொலிஸாரினதும், சட்டத்தரணிகளினதும் ஆட்சேபத்தினால் இம்மாதம் 26ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரியில் உட்புகுந்து 15ம் வார்ட்டில் சிகிச்சைபெற்றுவந்த மண்டைதீவைச் சேர்ந்த சண்முகலிங்கம் சிறீதரன் என்பவரை கடந்த மார்ச் மாதம் 14ம் திகதி பயங்கர ஆயுதங்களால் தாக்கி கொலைசெய்ததாக மண்டைதீவைச் சேர்ந்த ஆனந்தன், சிறீஸ்கந்தராசா, கைலைவாசன், சிவபாலன் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான அடையாள அணிவகுப்பு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் நேற்று நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சந்தேகநபர்களுடன் அடையாள அணிவகுப்பில் நிற்க 39 பேர் நீதிமன்றத்திற்குள் வந்திருந்தனர்.

வழக்காளி தரப்பில் பொலிஸாரின் உதவியுடன் ஆஜரான சட்டத்தரணி திரு ஏ. அன்ரனி இங்கு வந்துள்ள 30 பேரில் சந்தேக நபர்களின் உறவினர்கள் இனத்தவர்கள் உறவினர்கள், இடம்பெறலாமென்றும் இதனால்

8-ம் பக்கம் பார்க்க

## வானொலியில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)
அப்பர் சுவாமியின் குருபூசை தினத்தையொட்டிய சிறப்புச் சொற்பொழிவொன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆங்கில சேவை ஒன்றில் இன்றிரவு 7-45 மணிக்கு நிகழ்த்தப்படும்.

முன்னாள் யாழ் இந்துக் கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம் சொற்பொழிவாற்றுவார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

சந்தையா மகன் இந்திரா (தற்போது நாகலிங்கம் தரும குலசிங்கத்தின் மனைவி)
ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.
— வழக்காளி

இல. ஈடு / 13877 எதிராக

1. பொன்னையா பழனிச்சாமி கைம்பெண் அலமேலம்மா கன்னுதிட்டி.
2. செல்லையா யோன் யேசுதாசன் இராசா, கந்தர்மடம்,
3. யோன் ஜேசுதாசன் இராசா மகள் யஸ்மின் சந்திரவதனம், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு 13877ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1980-ம் ஆண்டு ஆனி மாதம் 6-ந் திகதி (6-6-80) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

3,350/- ரூபாவும் மேலும் 2000/- ரூபாவிற்கு 6-6-75 தொடக்கம் 14-11-79 வரைக்கும் நூற்றிற்கு 15% வீத வட்டியும், கட்டிக் கூடியதொகைக்கு அத் திகதியின்றில் முழும் பணம் இறுக்கும்வரைக்கும் 5% வீத வட்டியும், மூதந்தரைச் செலவு 9 ரூபாவும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப் பகுதி, நாவற்குழி கோவிற்பற்று கைதடி, நாவற்குழி இறை "பாடபாகுமராயன்வயல்" உறுதிப்படி நெற்பரப்பு 50 ஆறுல் 1966-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 10-ந் திகதி உத்தரவுபெற்ற நில அளவையாளர் வீ. வீ. குமாரசாமியினால் தயாரிக்கப்பட்ட 620-ம் இலக்க படத்தில் துண்டு '1' எனக் குறிப்பிடும் காணி நெற்பரப்பு 50 குளி 3 53 இதற்கெல்லை கிழக்கு: செல்லையா சுப்பிரமணியத்திற்கும் பெண் சரஸ்வதிக்கும் உரிய மிகுதி ஆதனம். வடக்கு ரோட்டு. தெற்கு நாகலிங்கம் அமிர்தலிங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய வாதனம். மேற்கு சின்னப்பொடி கந்தையாகத்திற்கும் மறுபேருக்குமுரிய வாதனம்.

தா. க. பொன்னுத்துரை, J. P.
கொமிஷனரும், விற்பனையாளரும்.

'அகிலகம்',
28/1, யாழ் ரோட்,
யாழ்ப்பாணம், 19-4-1980 5696

---


## பாலர் ஆசிரியை தேவை

கடந்த பல ஆண்டுகளாகத் திறம்பட நடாத்தப்பட்டு வரும் பாலர் பாடசாலைக்கு, பயிற்றப்பட்ட ஆசிரியை தேவை. தகுதியும் அனுபவமும் உடையோர் 15—5—80க்கு முன்னர் நற்சான்றிதழ்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

செயலாளர்,
கணபதி படிப்பகம்,
வல்வெட்டித்துறை.

5702



★ நாஷனல் றைஸ் குக்கர்
★ நாஷனல் TV கமரு
★ நாஷனல் ஏயர்கொண்டிசனர்
★ நாஷனல் றேடியோக்கள்
★ நாஷனல் கசட்டுகள்
★ நாஷனல் ரெலிவிசன்கள்
★ நாஷனல் விசிறிகள்
★ நாஷனல் வீடியோறெக்கோடர்கள்

மற்றும் பலதரப்பட்ட

உள்நாட்டு, வெளிநாட்டு றேடியோக்கள்

★ ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசட் ரேப்புகள்

★ றேடியோ உப உறுப்புக்கள்

★ அம்பிளி பயர்கள்

TV பூஸ்ரர், ஏரியல், ஏரியல் வயர்

★ விசேட வைபங்களை கலர் TV கமறுவால் படம் பிடித்துத் தருபவர்கள்

இன்னும் எத்தனையோ பொருட்களைத் தெரிவுசெய்ய

**V. K. இராசரத்தினம்,**
95, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.
போன்: 7447


### யாருடையது?

வீதியில் கண்டெடுக்கப்பட்ட யாழ். நாவலர் வீதியைச்சேர்ந்த ஒருவரின் உறுதி "ஈழநாடு" அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## ஏல விற்பனை

பொதுசன நூலகத்தில் பழைய பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் 24-5-80 சனிக்கிழமை காலை 9-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விரும்புவோர் ஏலமிட்ட இடத்தில் முழுப் பணமும் செலுத்தி பத்திரிகைகளையோ, சஞ்சிகைகளையோ அப்புறப் படுத்தவேண்டும்

ஆணையாளர்

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம். 5706

---

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சீனி மரைக்கார் முகம்மது இபுறுகீமின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

மரணசாதன
யாயாதிக்கம் இல. T/2/79

எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த சீனிமரைக்காயர் செய்யது அப்துல்காதர்

— மனுதாரர்

எதிர்

எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த

(1) முகம்மது இபுறுகீம் கைம்பெண் முகம்மது கலீகா உம்மா,
(2) முகம்மது இபுறுகீம் அமீன்.
(3) முகம்மது இபுறுகீம் பத்திரியா,
(4) முகம்மது இபுறுகீம் சருநிஸ்ஸா,
(5) முகம்மது இபுறுகீம் ஜெனிப,
(6) முகம்மது இபுறுகீம் அஸ்மீன்,
(7) முகம்மது இபுறுகீம் சியாஹு,
(8) முகம்மது இபுறுகீம் தஸ்கியா.

— எதிர்மனுதாரிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு ஆவணிமாதம் 14-ம் நாளன்று முற்பகல் 9 00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுணதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்

கே. விஸ்வலிங்கம்,
பதிவாளர்.

1979-ம் ஆண்டு வைகாசி மாதம் 31-ந் திகதி.

08-04-80

காரணம் காட்டும் திகதி 27-05-80 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
கே. விஸ்வலிங்கம்,
பதிவாளர்.

எம். எம். அபுத்தாகிர்,
மனுதாரர் தரணி
[illegible]

## புதுக்குடியிருப்பு கிராமசபையின் கேள்வி விளம்பரம்

புதுக்குடியிருப்பு கிராமசபை சந்தைக் கட்டிட விஸ்தரிப்பு வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் புதுக்குடியிருப்பு கிராம சபையின் விசேட ஆணையாளரால் 1980-ம் ஆண்டு மே மாதம் 21-ந் திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விகள் விசேட ஆணையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். அதன்பிரதி அதே நேரத்தில் கிடைக்கக்கூடியதாக முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கட்கு அனுப்பப்பட வேண்டும்.

3. கேள்விப் பிணையாக ரூபா 100-00-ம் பத்திரப்பணமாக ரூ. 10-00-ம் 20-5-1980-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரை கட்டியதன் பேரால் கேள்விப் பத்திரம் வழங்கப்படும்.

4. கேள்விகள் ஏற்கப்பட்டதென அறிவிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் பிணைப்பணத்தைக்கட்டி ஒப்பந்தம் எழுதுவதுடன் மூன்று மாதங்களுக்குள் வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளித்தல் வேண்டும்.

5. மேலதிகமான விபரங்கள் யாவும் கிராமச்சபைக் கந்தோரில் காரியாலய நேரங்களில் அறிந்து கொள்ளலாம்

வை. நீலகண்டன்
விசேட ஆணையாளர்
கிராமப்பிரதேசம்,
புதுக்குடியிருப்பு.

06-05-1980. 5750

---

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

236/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் சி. தப்பிஐயா பெண் காலஞ்சென்ற நாகபூஷணி என்பவரது மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

பரணசாதன நியாயாதிக்கம் வழ இல. சி/3518

செல்லையா தப்பிஐயா, இல 236/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு ஆனி மாதம் 20-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுணதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு மாசி மாதம் 25-ந் திகதி.

ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்,
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

வரைதல்:
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி
[illegible]

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்நகரிலுள்ள பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு அனுபவமுள்ள ரீ மேக்கர், பரிசாதகர், சைக்கிள் திருத்துனர் தேவை. நேரில் வரவும். ரவர் கோப்பி அன் கல்பார், 324, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். போன்: 7891. (5698)

லஇன புதுசைக்கிள்களை பூட்டுவதற்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை. கூலியை பொருத்த அடிப்படையில் நேரில் பேசிக் கொள்ளலாம்; அனுபவமுள்ளவர்கள் பட்டும் விண்ணப்பிக்கவும், நியூரோன் எலக்ரிக்கல்ஸ், 141, 143, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 5707

### பயிற்சி

வெளிநாடுகளிலும் கப்பல்களிலும் தொழில் பெற விரும்புவோருக்கு மிகவும் தேவையான தொழிற் பயிற்சி நெறிகள் விபரங்களுக்கு 10-5-1980 சனிக்கிழமை நேரில் வரவும். தேசிய கல்வி நிறுவனம், 11, பொம்சாக் கட்டடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5701

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி கணபதிப்பிள்ளை என்பவரின் மரணசாதனத்தினதும் மரணசாதன மற்ற மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

இளையதம்பி பையா விநாயகமூர்த்தி வீதி, ஆலூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. சி/3616

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்கும் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காகவும் மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு வைகாசி மாதம் 23-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுணதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு மாசி மாதம் 11-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

வரைதல்:
ஒப்பம்
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி
5693

## ஆணையாளர் ராஜினாமா

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராம சபை விசேட ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. க. குணரத்தினம் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஞானமே பரம்பொருளின் தன்மை. எனவே ஞானத்தைப் பெறு, விடுதலையடை.

- சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

### காசோலையாக வேதனமா?

வடபகுதியிலுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்குக் காசோலையாக வேதனத்தை வழங்கும்திட்டத்தை மே மாதம் முதல் அமுலாக்கப் போவதாகக் கல்வித்திணைக்களம் அறிவித்திருக்கிறது. நாடெங்கணும் நடைமுறையிலுள்ள வழமையான செயல்முறைக்கு மாறாகச் செயற்படுத்தப்படும் இந்தத் திட்டத்தை வரவேற்று ஆசிரியர் ஒருவர் வெளியிட்ட கருத்தை 'ஈழநாடு' மக்கள் கருத்துப் பகுதியில் கண்ணுற்றேன்.

சம்பளப்பணத்தை அதிபர்கள் வங்கிகளுக்குச் சென்று பெறுவதென்பது ஆபத்தானது- அபாயகரமானது. கடந்த காலத்தில் நடந்து முடிந்த சில அசம்பாவிதங்களும், அசௌகரியங்களும்- அதிபர்களுக்கு பாதுகாப்பற்றதோர் பயங்கர நிலையைத் தோற்றுவித்திருப்பது மறுக்கவோ, மறக்கவோ முடியாதொன்று. அத்தகைய சம்பவங்கள் வருந்தத்தக்குரியன கண்டிக்கப்படவேண்டியன என்பதில் எவருக்கும் அபிப்பிராயபேதம் இருக்கமுடியாது. ஆனால் நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போவதைப் போல- இத்தகைய சில அசம்பாவிதங்களுக்காக வடபகுதிக்கு மட்டும் தனிமையானதோர் திட்டத்தைச் செயற்படுத்துவது புத்திசாலித்தனமா?

கல்வித்திணைக்களம் நடைமுறையை மாற்றியமைக்கும் அளவுக்குப் பாதுகாப்புப்படை இங்கே பலவீனப்பட்டுவிட்டதா? அல்லது அதிபர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க முடியாத அளவுக்கு பாதுகாப்புத் திணைக்களம் செயலிழந்து விட்டதா? எது எப்படியிருந்தாலும் இப்புதிய திட்டத்தால் பாதிப்படையப்போவது ஆசிரியர்கள்தான் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

தமது உயிருக்குப் பாதுகாப்பற்ற நிலையிலே- உடைமைகளுக்குத் தகுந்த உத்தரவாதமில்லாத நிலையிலே- வங்கிகளுக்குச் சென்று தம்மால் பணத்தைப்பெற முடியாது என்ற அதிபர்களின் கோரிக்கையை நீதியின்பாற்பட்டது- நியாயமானது- மனிதாபிமானத்துடன் அணுகப்படவேண்டியது. எளிமையான தோற்றமும்- எவரையும் எளிதில் வசீகரிக்கும் புன்னகையும்- கடமையுணர்வும்- கல்லூரியைக் கட்டியெழுப்பிய பெருமையும் கொண்ட, சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர்-காயங்களுக்குக் கட்டுப்போட்ட நிலையிலே மருத்துவமனையில் இருந்த காட்சி இன்றும் என் மனக்கண்ணிலிருந்து மறையவில்லை. அத்தகையதொரு நிலையிலே அதிபருடன் கூடிச் சென்ற இரு ஆசிரியர்கள் பெற்ற அபாயகரமான அனுபவத்தையும் எளிதில் மறந்துவிட முடியாது. இத்தகைய எத்தனையோ சம்பவங்களுக்குப் பிறகும் எது நடந்தாலும் சம்பளத்தை அதிபர்கள்தான் பெற்றுவரவேண்டுமென்று வாதாடுவது விவேகமற்றது.

ஆனால் அதற்காகக் காசோலையாகச் சம்பளத்தை வழங்குமாறு திணைக்களத்தைக் கேட்பது தகுந்த பரிகாரமாக அமைய மாட்டாது. ஆசிரியர்கள் மீது இத்தகைய விஷப்பரீட்சையை நடத்தக் கல்வித்திணைக்களம் முனையக்கூடாது. அதிபர்களின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் அதே நேரம் ஆசிரியர்களின் நலனைப் பாதிக்காத வகையில்மாற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-

காசோலையை மாற்றுவதற்கு வங்கிகளின் வாசலில் ஆசிரியர்கள் தவங்கிடப்பதை எவரும் ஆதரிக்கமாட்டார்களென நம்புகின்றேன்- இதனால் வங்கிகளில் மேலும் நெருக்கடி ஏற்படும். வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து விலைவாசிகள் உயர்ந்துள்ள இச் சந்தர்ப்பத்திலே, எந்தவொரு அரசாங்க ஊழியனும் தன் சம்பள நாளுக்காகக் காத்திருப்பது அனைவரும் அறிந்த விடயம். எனவே 20ம், 21ம் திகதிகளில் இனிமேல் காசோலை மாற்றும் பிரச்சினை அல்லது தன்கணக்கிலிட்டுப் பணத்தை மீளப்பெறும் பிரச்சினை ஆசிரியர்களை எதிர்நோக்கப் போகிறது. இன்னும் ஒரே சமயத்தில் பல ஆசிரியர்கள் லீவில் போக வேண்டிய நிலைமை தவிர்க்க இயலாததாகவரப்போகின்றது இதனால் ஆசிரியர்கள் தமது கடமையைப் பூரணமாகப் பாடசாலையில் நிறைவேற்ற முடியாத நிலைமையை ஏற்படுத்தி- அதனால் மாணவ சமுதாயத்தின் கல்வியிலும் மண்ணைப் போடுவதை எந்த ஒரு ஆசிரியனும் அனுமதிக்க மாட்டானென்பது திண்ணம்-

எனவே ஏனைய பல திணைக்களங்கள் செய்வதைப் போலக் கல்வித் திணைக்களமும் குறித்த நாளில் ஆசிரியர்களின் சம்பளத்தை எடுத்துச் சென்று பாடசாலைகளில் வைத்து வழங்க முன்வருமானால் அதுவே இப்பிரச்சினைக்குச் சிறந்ததோர் தீர்வாக அமையும். அதே நேரத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்ளவும் இம்முறை இலகுவாயிருக்கும்.

த. நாகேஸ்வரன்
(ஆசிரியர்)
பெரியமாவடி,
சாவகச்சேரி.

# இலக்கணச்சுவாமி முத்துக்குமாரத்தம்பிரான் குருபூஜைதினம் இன்று

- சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணியமுதலியார் --

(இலக்கணச் சுவாமிகள் என்னும் ஸ்ரீமுத்துக்குமாரத்தம்பிரானின் குருபூஜைத்தினம்இன்றாகும். இதையொட்டி இக்கட்டுரை வெளியாகிறது)

சைவப் பெரியார் ஸ்ரீமத் இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் சிதம்பரத்தில் மாலைகட்டித்தெருவில் மெய்கண்ட வித்தியாசாலையில் விரோதிவருஷம் சித்திரை மாதம் 10ம் திகதி (22-4-49 தசமி அவிட்ட நாள் கூடிய வெள்ளிக்கிழமை பகல் 10-30 மணியளவில் அம்பலவாணர் திருவடி அடைந்தார்கள். அவர்களது மறைவு சைவவுலகத்துக்குப் பெருந்த நட்டமாகும் அவர்கள் தமிழ் மொழி, வடமொழி இரண்டிலும் நிரம்பிய புலமைவாய்ந்தவர்கள். அதனோடு சைவசித்தாந்த சாத்திரங்களை துறைபோக ஐயந்திரிபறக்கற்றவர்கள்.

இலங்கை - வண்ணார்பண்ணையில் பரம்பரைச் சைவ வேளாளமரபில் அவதரித்த இவர்கள் 14 வயதளவில் தமது நாட்டினைவிட்டு இந்த நாட்டுக்கு வந்துவிட்டார்கள் அதன்பின் தமது இலங்கைநாட்டுக்குச் செல்லுதலில்லை. இங்கு வந்த காலம் முதல் சைவசந்நியாசவிதிப்படி துறவுபூண்டு பானுகோயில் என்றுவழங்கும் சூரியனார் கோயில் சிவாக்ரயோகிகள் ஆதீன குருமூர்த்திகளாகச் சிறந்து விளங்கிய ஸ்ரீ ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேசிகர்பால் முறையே முத்திதீக்கையும் பெற்றுத் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் சைவசித்தாந்த சாஸ்திரங்களையும் முறைப்படி உபதேசிக்கப் பெற்றனர். வடமொழி பயிற்சியும் அத்தேசிகர்பால் பெற்று விளங்கினர். சந்நியாசம்பூண்டு பிட்சை செய்துகொண்டு அநேகவருஷங்கள் வித்தைகள் பயின்றனர். நிரம்பிய கல்வியும் ஞான



மு[illegible]னும் ஒருசிறிதும் ஆடம்பரமில்லாத தூயதவ ஒழுக்க வாழ்க்கை வாழ்ந்தனர். தவத்தால் பொலிந்த திருமேனியையுடையவர். அவர்களது பெருமுயற்சி

(5ம் பக்கம் பார்க்க)

# தமிழக சட்டமன்றத் தேர்தலில் வெற்றியாருக்கு?

நமது தமிழக நிருபர் வி. ரவிச்சந்திரன்

முன்வினை, பின்வினை என்பார்களே, அது எம். ஜி ஆரைப் பொறுத்தவரை சரியாக இருக்கிறது. தி மு க.விலிருந்து வெளியேற்றப்பட்டு, அவர் தனிக்கட்சி ஆரம்பித்த போது அதில் சேர்ந்தவர்கள் எல்லாம் யார் யார்? எம் ஜி. ஆரது சினிமா செல்வாக்கைக் கண்டு மயங்கி அதில் அரசியல் லாபம் தேட, வந்தவர்கள்தான்! தி மு. க. விலிருந்து கருணாநிதித்த "டாட்டா" காட்டிவிட்டு, யார் யார் வந்தார்களோ; அவர்களெல்லாம் ஏற்றுக் கொண்டார்! "என்னிடமா கணக்குக் கேட்கிறாய்? இதையெல்லாம் சினிமாவில் ஜெயலலிதாவிடம் வைத்துக் கொள்" என்று பகிரங்கமாகப் பேசிய மதுரை முத்துவைப், தன்னால் வாழ்வுபெற்று கொடுக்கப்பட்ட நெடுஞ்செழியன், ஆதித்தன், சத்தியவாணி முத்துவையும்கூட அவர் சேர்த்துக்கொண்டு சமாதானம் செய்தார்.

இப்போது பாராளுமன்றத் தேர்தலில் அ. தி மு க. தோற்றபிறகு யார் யார் அவரை நாடி வந்தார்களோ, அவர்களெல்லாம் மீண்டும் தி மு கவுக்கு ஓடிவிட்டனர்! ஓடிக்கொண்டும் இருக்கிறார்கள். முன்பு இந்தச் செயலைக் கண்டு பூரித்து நின்றாரோ; இன்று அதே செயலுக்கு பலியாகி இருக்கின்றார்.

தற்சமயம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் கலைஞர் கருணாநிதியின் போர்முரசும் எக்காளமும் தான் அதிகமாகக் கேட்கமுடிகிறது. எம். ஜி ஆரின் பேச்சுக்களையோ செய்திகளையோ அதிகம் கேட்க முடியவில்லை.

சினிமாவிலும், அரசியலிலும் ஒரு மாபெரும் சக்தியாக விளங்கிய எம். ஜி ஆர். இன்று தோற்றுப்போய் இருக்கிறார் என்பதை இன்னமும் நம்பத்தான் முடியவில்லை. காரணம் [illegible] படிப்பட்டது [illegible] ஆட்சியிலிருந்த முன்னர் அவர் பம்பாய் சென்றபோது பம்பாயின் போக்குவரத்தே ஸ்தம்பித்து விட்டது! மொழிபுரியாத வட இந்தியாவிலேயே இந்தக்கதியென்றால் தமிழகத்தில் சொல்ல வேண்டியதில்லை!

இதில் முக்கிய பங்கு வகிப்பவர் கருணாநிதிதான் ஒருநாள் சட்டசபையில் பல்கேரியநாட்டில் கப்பல் வாங்கியதில் அ. தி. மு. க. அரசு ஊழல் செய்துவிட்டது என்று தன் தாக்கு ஜாலங்களுடன் குற்றம் சாட்டினார்! இதை எம் ஜி ஆர். மறுத்து விளக்கம் சொன்னாலும் மக்கள் மத்தியில் அவருக்கு ஒரு கரும்புள்ளி விழக் காரணமாக அது அமைந்துவிட்டது!

மேலும் ஆட்சி செய்த வகையில் எல்லாத் துறையினரும் வேலைநிறுத்தம் செய்தனர். இதில் எம். ஜி ஆர். நடந்து கொண்ட முறை எல்லோரது விரோதத்தையும் அவருக்குத் தேடித்தந்தது அரசியலில் கொள்கை உறுதி இல்லாதவராக இருந்தார். வேலைநிறுத்தம் தொடங்கும்போதே சுமுகமாகத் தீர்க்காமல் கலவரம் நிகழும் போது அவசரம் அவசரமாக கோரிக்கைகளை நிறைவேற்றுவது எம் ஜி ஆரின் வழக்கம் என்று மக்கள் கேலி பேசுமளவுக்கு அவர் நிலை தாழ்ந்தார். முக்கியமாக விவசாயிகளைப் பகைத்துக் கொண்டார். இதைப்போல பல காரணங்களால் மக்கள் மத்தியில் அவரது "சுதாநாயகத் தோற்றம்" சிறிது சிறிதாக சரியத் தொடங்கியது தோல்வி கட்டியது. ஆனாலும் இதை நிரந்தரமான தாகக் கொள்ள முடியாது.

அரசியல் வாழ்வேவேண்டாமென்று தன் வாயால் கூறிய இந்திராவே மூன்றில் இரண்டு பங்கு பலம் பெற்று வந்துவிட்டார்! இந்திரா-தி மு. க.கூட்டணி உருவானதும் தி மு. க.வுக்கும் இந்திரா காங்கிரசுக்கும் இடையில் அடுத்த முதல்வர் யார் என்பதில் வாக்குவாதம் ஏற்பட்டது தேர்தல்

(5-ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

ஆனமடுவத்தொகுதி இடைத்தேர்தலில் ஆளும் கட்சியான ஐக்கியதேசியக் கட்சி வேட்பாளர் வெற்றியீட்டியிருக்கிறார் பார்லிமென்டில் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி தனது உறுப்பினர் எண்ணிக்கையில் ஒன்றை இழந்துள்ளது. மிகப்பெரும் பான்மைப் பலம் கொண்ட ஆளும் கட்சிக்கு மேலும் ஒரு எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

அரசு மீது மக்கள் இன்னமும் நம்பிக்கை வைத்திருக்கிறார்களென்றும் அரசின் அபிவிருத்தித்திட்டங்களுக்கு மக்கள் அங்கீகாரமளித்துள்ளார்களென்றும் ஆளும் கட்சியினர் கூறிப்பெருமைப்படுவார்கள்.

"ஜனநாயகமுறையில் எங்களை வீழ்த்தமுடியாது" என்றும் ஆளும் கட்சியினர் மார்தட்டலாம்! ஜனநாயக முறையில் தான் ஆட்சியை மாற்ற முடியுமென்றும் ஜனநாயகமல்லாத முறையில் ஆட்சியை மாற்றுவதற்கு அனுமதிக்க முடியாதென்றும் தான் ஜனாதிபதி முன்னரே பலதடவை எச்சரித்திருக்கிறாரே!

சமீபத்தில் கொழும்பில் நடந்த மேதினக்கொண்டாட்டங்களில் மக்கள் விடுதலை முன்னணி என்னும் ஜே வி பி. தான் பிரமாண்டமான ஊர்வலத்தையும் கூட்டத்தையும் நடத்தப் பெயர்பெற்றது பொதுவாக நாட்டில் ஜே. வி. பியே இடபோது வளர்ந்து வரும் எதிர்க்கட்சியாகத் தோற்றமளிக்கிறது. ஆனாலும் ஆனமடுவ இடைத்தேர்தலில் போட்டியிட்ட ஜே. வி பி. யின் வேட்பாளருக்கு ஆயிரம் வோட்டுக்கள் கூடக்கிடைக்காதது ஏன்?

"இந்த அரசாங்கம் அரசியலையே திசைதிருப்பிவிட்டிருக்கிறது. என்ன பொருள் வேண்டுமானாலும் எங்கிருந்தும் இறக்குமதி செய்யலாம். எவரும் எந்தநாட்டுக்கும் எதற்கும் செல்லலாம் இந்த வசதிகளிருப்பதால் அரசியல் அபிப்பிராயசிந்தனையை மக்கள் இழந்து விட்டனர்." என்கிறார் ஒரு அரசியல் வாதி.!

ஃ ஃ ஃ

பாகிஸ்தான் அதிபர்—முகமட் கொமெய்னி.

உலகின் நீண்ட சுவர்—ஆக்ராவில் உள்ளது.

ஐக்கியநாடுகள் சபை பொதுச் செயலாளர்—திரு. சக்தார்.

ஹெலிகொப்டர்? காரில் உள்ள பிழையைத் திருத்துவதற்காக காரை "ஜாக்" போட்டு உயர்த்துவது!

ஆச்சரியப்படாதீர்கள்!

கர்நாடகத்தில் சப் இன்ஸ்பெக்டர் தேர்வு எழுதிய பட்டதாரிகள் சிலர் எழுதிய விடைகள்தான் மேலே உள்ளவை.

யாழ்ப்பாணம் திருவண்ணாமலை நகர் அருள்மிகு செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயிலில் சென்ற 29-4-80 செவ்வாய்க்கிழமை (சித்திரா பூரணை) தொடக்கம் கந்தப் புராண படனப் படிப்பு நடைபெற்று வருகின்றது. ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப்படலம், பாயிரப்படலம், திருக்கைலாசப்படலம் ஆகியவற்றைத் தொடர்ந்து இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் பார்பதி திருமணப் படலம் பயன் சொல்லப்பட இருக்கின்றது. புராண படலத்தில் விபுலானந்த அச்சக அதிபர் சைவப் புலவர் கந்தசாமி, ஓய்வுபெற்ற அதிபர் அராலி சைவப் பெரியார் திரு. மு. சதாசிவம் அவர்களும் கலந்து கொண்டு பாட்டும் பயனும் கூறுவார்கள்.

ஃ ஃ ஃ

திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணையல்லவா?

— ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தந்தை செல்வாவின் பணியை தொடர்ந்து மேற்கொள்வோம்"

## லண்டன் தமிழர் ஒருமைப்பாட்டுக்குழு தீர்மானம்

லண்டன், மே. 8

தமிழ்மக்களின் பழமை வாய்ந்த நாடான தமிழ் ஈழத்தை மீட்டெடுக்க அமரர் தந்தை செல்வா ஆற்றிய பணியினை தொடர்ந்தும் மேற்கொள்வதென்று லண்டனில் உள்ள தமிழ் ஒருமைப்பாட்டுக்குழு தீர்மானித்துள்ளது.

லண்டன் விம்பிள்டன் சன சமூக நிலையத்தில் கடந்த 26ம் திகதி நடைபெற்ற செல்வா நினைவுதினக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளது.

மேற்படி ஒருமைப்பாட்டுக் குழுத்தலைவர் திரு கிருஷ்ண வைகுந்தவாசன் தலைமையில நடைபெற்ற இவ்விழாவில் சாவகச்சேரி எம்.பி. திரு. வி. என் நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தமிழ் ஈழத்தின் சிற்பியான தந்தை செல்வாவை நினைவு கூரும் வகையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகிய கூட்டத்தில் திரு. வைகுந்தவாசன் தமது தலைமையுரையில் கூறியதாவது!

இலங்கையில் தமிழ்மக்களுக்கென தமிழ்ஈழம் ஒன்றை அமைப்பதற்கு ஆதரவு தெரிவித்து வரும் தமிழ்நாடு, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழும் கோடிக்கணக்கான தமிழ்மக்கள் மத்தியில் தந்தை செல்வாவிக்கு உயர் தமதிப்பளிக்கப்பட்டு வருகிறது.

திரு. நவரத்தினம் அங்கு பேசுகையில், தமிழர்விடுதலைக் கூட்டணியில் ஒழுக்கமும் தலைமைப் பதவி மீது விசுவாசமும் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

தமிழ்ஈழம் அமைக்கும் முயற்சிகளை மேற்கொள்ளும்போது எதிர்நோக்கும் நடைமுறைக் கஷ்டங்களை சகலரும் உணரவேண்டுமென்றும் தவறு கண்டுபிடிப்பதில் அர்த்தமில்லை என்றும் அவர் கூறினார்.

நான்கு மணித்தியாலங்களாக நடைபெற்ற இக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். தமிழ் ஈழதேசியகீதமும் இசைக்கப்பட்டது. (இ)

---

## பளையில் நடமாடும் செயலகம் இன்று திறப்புவிழா!

[பச்சிலைப்பள்ளி]

யாழ். மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நடமாடும் செயலகமுறையின்கீழ் இன்று வெள்ளிக்கிழமை பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் யாழ் அரசாங்க அதிபரும், யாழ். மாவட்டஅமைச்சின் செயலாளருமான திரு யோகேந்திர துரைசுவாமியின் தலைமையின்கீழ் செயலகம் செயற்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்களின் தேவைகளைப் பொதுமக்கள் நேரடியாகவும் கிராம அபிவிருத்திச் சங்கப்பிரதிநிதிகள் மூலமும் செயலகத்தின் கவனத்தின்கீழ் கொண்டு வருவார்கள். காலை 10 மணிக்கு இச் செயலகத் திறப்பு விழாவைபவம் முடிவுற்றபின்னர் யாழ். அரசாங்க அதிபர், பளையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பச்சிலைப் பள்ளி உதவி அரசாங்க அதிபர் பணிமனையையும், பளை தென்னை ஆராய்ச்சி நிலையத்தையும், இயக்கச்சியிலுள்ள ஆட்டுவளர்ப்பு பண்ணையையும் பார்வையிட்டபின்னர் முள்ளியான், ஆழியவளை, வத்திராயன், மருதங்கேணி, செம்பியன் இப்பகுதியிலுள்ள கிராம அபிவிருத்திச்சங்கங்கள் யாழ் அரசாங்க அதிபருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

---

## தமிழகப் பேராசிரியை இன்று உரை

(புலோலி)

பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக்கிழமை நல்லைஆதீன குருமணி ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் தமிழகம் தருமபுர ஆதீன செந்தமிழ்க்கல்லூரி பேராசிரியை வித்வான் ப. நீலா. "திருவடிப்பேறு" என்னும் பொருள்பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

---

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பு தலைமைச்காரியாலயத்தில் அதிர்ஷ்டம்பார்க்கப்பட்ட 778-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
**28 D 0178**
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
**30 D 0290**
ரூபா 40 ஆயிரம்

மூன்ருவது பரிசு
**09 S 0143**
ரூபா 10 ஆயிரம்

தலா 1475 ரூபா 70 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு!

| | |
|---|---|
| 11 A 0981 | 30 A 0119 |
| 05 B 0349 | 07 B 0495 |
| 08 B 0940 | 14 B 0099 |
| 14 B 0852 | 15 B 0763 |
| 01 C 0039 | 01 C 0468 |
| 18 C 0052 | 20 C 0335 |
| 20 C 0850 | 22 C 0128 |
| 28 C 0167 | 31 C 0709 |
| 32 C 0950 | |
| 03 D 0462 | 11 D 0286 |
| 19 D 0037 | 21 D 0739 |
| 22 D 0487 | 24 D 0151 |
| 27 D 0654 | 30 D 0851 |
| 23 E 0944 | 25 E 0946 |
| 04 F 0146 | 05 F 0005 |
| 10 F 0228 | |
| 02 G 0733 | 16 G 0616 |
| 13 H 0521 | 14 H 0102 |
| 31 J 0657 | |
| 01 K 0796 | 01 K 0812 |
| 02 K 0377 | 13 K 0546 |
| 15 K 0107 | 17 K 0610 |
| 23 K 0109 | 24 K 0325 |
| 28 K 0287 | |
| 06 L 0341 | 17 L 0109 |
| 18 L 0479 | 20 L 0153 |
| 22 L 0916 | 26 L 0266 |
| 32 L 0581 | |
| 22 M 0131 | 22 M 0151 |
| 15 M 0671 | |
| 13 N 8070 | 21 N 1000 |
| 26 O 0802 | |
| 10 P 0791 | 15 P 0521 |
| 17 P 0092 | 17 P 0994 |
| 03 Q 0368 | 05 Q 0576 |
| 08 R 0264 | 18 R 0125 |
| 20 R 0263 | 23 R 0372 |
| 31 R 0150 | |
| 05 S 0453 | 10 S 0400 |
| 19 S 0980 | 31 S 0051 |
| 14 T 0794 | 08 T 0066 |
| 10 T 0688 | 19 T 0095 |
| 27 T 0452 | 31 T 0534 |
| 31 T 0906 | |
| 03 V 0456 | 05 V 0071 |
| 11 V 0151 | 16 V 0491 |
| 22 V 0829 | |
| 17 W 0815 | 21 W 0504 |
| 26 W 0526 | 32 W 0120 |
| 22 X 0389 | 27 X 0307 |
| 28 X 0354 | |
| 05 Y 0120 | 23 Y 0220 |
| 32 Y 0944 | |
| 01 Z 0376 | 17 Z 0537 |
| 11 Z 0326 | 17 Z 0977 |
| 24 Z 0015 | 31 Z 0626 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

---

# மூன்று அரச சட்டத்தரணிகள் ராஜினமா!

[யாழ்ப்பாணம்]

சட்டமா அதிபர் திணைக்களத்தை சேர்ந்த மூன்று தமிழ் அரச சட்டத்தரணிகள் ராஜினாமாச் செய்துள்ளார்கள்.

அரச சட்டத்தரணி திரு. ஆர். யூ ரஞ்சன் கடந்த மாதம் ராஜினமா செய்துள்ளார். இவர் கொழும்பில் தனிப்பட்ட முறையில் தொழில் புரிந்துவருகிருர்.

யாழ். மேல்நீதிமன்றத்தில் கடமையாற்றிய அரச சட்டத்தரணி ஆர். தவராசாவும் ராஜினமா செய்துள்ளார். இவர் யாழ்ப்பாணத்தில் தனிப்பட்டமுறையில் தொழில் புரிந்து வருகின்ருர்.

7 வருடங்களாக சிரேஷ்ட அரச சட்டத்தரணியாகக் கடமையாற்றிய திரு. பி.சிவலோகலோகநாதனும் ராஜினமா செய்துள்ளார். இவரும் யாழ்ப்பாணத்தில் தனிப்பட்ட முறையில் தொழில் புரிந்து வருகின்ருர்.

இவர்கள் மூவரும் தனிப்பட்ட முறையில் தொழில் பார்ப்பதற்காகவே ராஜினமாச் செய்துள்ளதாக கூறப்படுகிறது. ]க|

---

## பனங்கட்டித் தொழில் மீண்டும் புத்துயிர்பெறும்!

(யாழ்ப்பாணம்)

சீனி விலை குறைக்கப்பட்டதை தொடர்ந்து வடபகுதியில் மூடப்பட்ட பனங்கட்டித் தொழிற்சாலைகள் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சுதந்திரகட்சி அரசு காலத்தில். வடபகுதியில் பனங்கட்டி உற்பத்தி செய்வதற்காக பனங்கட்டி உற்பத்தி நிலையங்கள், பல ஆயிரக்கணக்கான ரூபா செலவில் கட்டப்பட்டன.

சீனிவிலை 7 ரூபாவாக உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த பனங்கட்டி உற்பத்தி நிலையங்கள் படிப்படியாகத் திறக்கப்பட்டன.

தற்போது சீனியின் விலை 4 ரூபா50 சதமாக குறைக்கப்பட்டதை தொடர்ந்து மீண்டும் பனங்கட்டி உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

தென்மராட்சி இழக்கு தெங்குட்பனம் பொருள் உற்பத்திச் சங்கத்தின்கீழ் இயங்கி வந்த 14 பனங்கட்டி நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. தற்போது 2 பனங்கட்டி நிலையங்கள் இதேபோல் மற்றும் பகுதிகளிலுள்ள பனங்கட்டி நிலையங்களும் இயங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. (ஜ)

---

யாழ். நகரில் பொலிஸார் 'வேட்டை'

# ரூ.1,50,000 பெறுமதியான 32 பீடி இலை மூடைகள்!

## லொறியும் கைப்பற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த 32 பீடிப்புகையிலை மூடைகளை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவுபத்துமணியளவில் யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் ஆலயத்திற்கு முன்பாக நின்ற லொறிஒன்றின் மீது சந்தேகம் கொண்ட யாழ். பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ்இன்ஸ்பெக்டர்பிரேமதாசாவும் அவர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினரும், மேற்படி லொறியில் இருந்த மூடைகளைச் சோதனை செய்தபோது லொறிக்குள் மிளகாய்மூடைகளுக்கும் வெங்காயமூடைகளுக்கு மிடையே இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்டதாகக் கூறப்படும் ஒன்றரைலட்சம் ரூபா பெறுமதியான முப்பத்திரண்டுபீடிப் புகையிலை மூடைகளைக்கண்டு பிடித்தனர்.

மேற்படி பீடிப்புகையிலை மூடைகள் கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட இருந்ததாக விசாரணையிலிருந்து தெரியவந்தது.

பீடி இலை மூடைகளையும், லொறியையும் சந்தேக நபர்கள் ஆறுபேரையும் பொலிசார் சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ் உதவி சுங்க சேகரிப்பாளர் திரு. என். கந்தசாமி, திரு.திலக்பெரேரா ஆகியோர் இது சம்பந்தமான விசாரணை மேற்கொண்டுவருகின்றனர் (ஜோ)

---

# ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு தூதுவர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் தூதுவர் திரு புறூனேமே இம்மாதம் 16, 17-ந் திகதிகளில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருக்கிருர்.

இலங்கை ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு நட்புறவுச் சங்க யாழ் கிளை இவருக்கு மகத்தான வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றது

16ந் திகதி இங்குவரும் தூதுவரும் இவரதுபாரியாரும் அன்று பல முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பார்கள். அன்று மாலை யாழ். மத்தியக்கல்லூரியில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிருர்கள்.

17-ந் திகதி பிற்பகல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் கலாச்சார நிகழ்ச்சிகளுடன் வரவேற்பு வைபவம் நடைபெறும்

இலங்கை ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் யாழ். கிளைத் தலைவரும் வட்டுக்கோட்டை எம். பி.யுமான திரு தா. திருநாவுக்கரசு அடுத்த மாதம் நடுப்பகுதியில் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசிற்கு விஜயம் செய்யவுள்ளார். இவரை அந்நாட்டு நட்புறவுச் சங்கம் அழைத்துள்ளது.

---

பொன்னாலை பெண்கடத்தல் வழக்கு

# குற்றத்தை ஏற்ற4ம் எதிரிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை!

## ஏனைய எதிரிகள் விடுதலை

(மாவிட்டபுரம்)

பொன்னாலை பெண்கடத்து வழக்கில் 4-ம் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அவருக்கு 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு ஏனைய நால்வரும் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம் ஜாமில் முன்னிலையில் நடைபெற்றது.

பொன்னாலையில் வைத்து சண்முகம் சுசீலா என்னும் இளம் பெண்ணை பலாத்காரமாக டாக்ஸி ஒன்றில் கடத்திச் சென்றதாக ராஜு இரத்தின சிங்கம் கணபதி தெய்வேந்திரன் சந்திரா சிங்கம் கிருஷ்ணன் பூபாலசிங்கம், முருகன் சதானந்தன் ஆகியோர் மீது இல்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது

4-ம் எதிரியான கிருஷ்ணன் பூபாலசிங்கம் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் அவருக்கு 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்த நீதிபதி ஏனைய எதிரிகளை விடுதலைசெய்தார்.

1-ம், 5-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே செல்வரத்தினம் செல்வி. மோகாந்தி செல்வரத்தினம் 2-ம் 4-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். தவராஜா செல்வி மோகாந்தி செல்வரத்தினம் 3-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செல்வி மோகாந்தி செல்வரத்தினம் ஆகியோர் ஆஜரானர்.

அரச தரப்பில் அரசு சட்டத்தரணி டி. அரவிந்தன் ஆஜரானர்.

---

## வேகநடை வீரருக்குப் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வேகநடையில் உலக சாதனையை ஏற்படுத்திய கொடிகாமத்தைச் சேர்ந்த திரு. கணேசுவுக்கு பாராட்டு விழா நடத்த, கொடிகாமம் இளைஞர் ஒன்றியத்தினர் ஏற்பாடுசெய்து வருகின்றனர்.

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் திரு. கணேசு 96½ மணித்தியாலத்தில் 349½ மைல் நடந்து வேகநடையில் புதிய சாதனையை ஏற்படுத்தினர். சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

கிளிநொச்சி எம். பி. திரு. ஆனந்தசங்கரி, "சாவகச்சேரி நகரசபைத்தலைவர் திரு எஸ். கே. திரவியநாயகம், மிருசுவில் கட்டளைக் குரவர் வண. பிதா பிரான்சிஸ் அடிகளார் நேரில் வாழ்த்தினர்கள். (ச-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலஸ்தீனரின் சுயாட்சி

# பேச்சுவார்த்தை எதுவித தீர்வுமின்றி முடிவுற்றது

கெய்ரோ, மே 8

பாலஸ்தீன மக்களுக்கு சுயாட்சி வழங்குவது தொடர்பான அமெரிக்க—இஸ்ரேல்—எகிப்து அதிகாரிகள் நிலையிலான பேச்சுவார்த்தைகள் எதுவித தீர்மானங்களுமின்றி முடிவடைந்தன.

பாலஸ்தீன மக்களின் சுயாட்சி தொடர்பான உடன்பாடு கைச்சாத்திடப்படுவதற்கு இன்னும் 19 நாட்கள் மட்டுமே இருக்கும்போது பேச்சுவார்த்தைகள் தீர்மானமின்றி முடிவடைந்தது, முத்தரப்பினருக்கும் பெரும் ஏமாற்றமாகவே உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் அடுத்தவாரம் எகிப்தில் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## திருட்டுவழக்கு ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

அரைக்கும் ஆலை உதிரிப் பாகங்களைத் திருடியது தொடர்பாகப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு நீதிமன்றத்தில் சரண்புகுந்தவர் தாம் சுற்றவாளி எனக் கூறியதால் வழக்கு விசாரணைக்காக ஆகஸ்ட் 27ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

ஊறணியைச் சேர்ந்த பண்டாரிநாதன் என்பவரது அரைக்கும் ஆலையிலிருந்து 4500 ரூபா பெறுமதியான மோட்டார் உட்பட மற்றும் உதிரிப்பாகங்களைத் திருடியதாகக் காங்கேசன்துறையைச் சேர்ந்த எஸ். நடராசா என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு ஒன்றையடுத்து மல்லாகம் நீதிபதி அவருக்குப் பிடிவிறாந்து பிறப்பித்திருந்தார்.

சந்தேகநபர் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் நீதிமன்றத்தில் சரண்புகுந்து தாம் சுற்றவாளி என தெரிவித்ததால் விசாரணையை ஆகஸ்ட் 27ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார். (அ)

## பாஷையூரில் இன்றும் நாளையும் மக்கள் விழா

(பாஷையூர்)

பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சமக சன சமூக நிலையத்தினர் தமது 28-வது ஆண்டு விழாவை இம்முறை மக்கள் விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

இன்றும் நாளையும் நடைபெறும் இவ்விழாவில் இன்று முதன்மை விருந்தினராக யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. கணேஷ், தம்பதிகளும் நாளை திரு. குமார் பொன்னம்பலம் தம்பதிகளும் கலந்து கொள்கின்றனர்.

25 மைல் சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம் இன்னும் பல விளையாட்டுப் போட்டிகளுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் திரு. கே. எஸ். ராஜா கலந்து கொள்ளும் பாட்டுக்குப் பாட்டுப் போட்டி, கேள்வி பதில் வேடிக்கை விளையாட்டும் போன்ற பல நிகழ்ச்சிகளும் கடலில் மிதக்கும் மேடையில் நடைபெறவிருக்கின்றன.

# ரசிக ரஞ்சனசபா இசைவிழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ரசிக ரஞ்சன இசைவிழா இன்று ஆரம்பமாகிறது. சபா மண்டபத்தில் இவ்விழா 18-ம் திகதி வரை தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

வழமை போல் இவ்வாண்டும் பிரபல இசைக்கலைஞர்களும் சபாவின் சங்கீதக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களும் கலந்து கொண்டு இன்னிசை வழங்குவார்கள்.

யாழ்ப்பாண எம். பி திரு. வெ. யோகேஸ்வரன் தலைமையில் இன்றைய நிகழ்ச்சிகள் இடம்பெறும். நிகழ்ச்சி விபரம் வருமாறு:

மாலை 6-00—6-30 விநாயகர் பூஜை, மங்கள இசை. 6-30—8-15 சபாவின் சங்கீதக் கல்லூரி மாணவர்கள் பாட்டு இரவு 8-15—8-30 தலைமையுரை. 8-30—10.00 வில்லிசை-கலாவிநோதன் கே. என். கணபதிப்பிள்ளை. (அ)

## இலக்கண...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

யாலே சிவஞான மாபாடியம் முழுவதும் அச்சில் வெளிவந்து ஞானத் தமிழுலகம் வீறு கொண்டு விளங்கக் காரணமாயிற்று.

சிவாக்ரபாடியம், சைவசந்நியாசபத்ததி, திருநாரையூர்ப் புராணம் முதலிய பலநூல்கள் தமிழிலும் வடமொழியிலும் வெளிப்படுத்தியவர் இவர்களாவர். தம்மைவந்தடைந்த பக்குவப்பட்ட நன்மாணாக்கர்கள் பலருக்கும் சைவசாத்திரங்கள், இலக்கண இலக்கியப் பாடங்கள், சைவபுராணங்கள் இவற்றை முறையாகப் பாடஞ் சொல்லிப் பயிற்றுவிப்பார்கள். வான் எழுதி வெளியிட்டுவரும் பெரியபுராண உரைக்குப் பேராதரவாய் எல்லாவகைகளாலும் ஊன்றுகோலாக உதவி வந்தனர். நாடோறும் தவறாத சிவபூசை நியமம் உடையவர்கள் ஒன்றிரண்டு நாட்களே நோய் வாய்ப்பட்டு இருந்து சமாதியடைந்தார்கள்.

இவர்களதுஇன்னுயிர் இறைவரி திருவடிக்கீழ் இன்புற்றமர்வதாக.

(சித்தாந்தம் மே 1949)

## 'பிள்ளையனார் வளவு' இலக்கணசுவாமியார் அவதரித்த புண்ணியபூமி

வண்ணை சிவன்கோவில் மேலைவீதியில் உள்ள 'பிள்ளையனார் வளவுகள்' என்னும் காணிகள் காலம்சென்ற திரு குமாரகுலியர் வழித் தோன்றலாகிய வெற்றிவேற்பிள்ளை (இலக்கண சுவாமியாரின் தந்தை) சிவகாமித் தாயார் முதலியோரின் முன்னோர்கள் பல நூற்றாண்டுகாலமாக வசித்து ஆண்டு. அனுபவித்த ஆதனங்கள் தற்போது "ஈழநாடு" காரியாலயமிருக்கிற இடத்துக்கு வடக்கு மூலையில் இருந்த ஓர் நாற்சார வீட்டிலேயே தான் "இலக்கணசுவாமியார்" அவதரித்தார். இக் காரியாலயத்துக்கு வடக்குப்புறமாக உள்ள இன்னொரு நாற்சார வீட்டில்தான் "சிவகாமித் தாயார் (இலக்கணசுவாமியாரின் மைத்துனி) பல காலம் வாழ்ந்து நித்திய சிவபூசை செய்த இடம். இவர்கள் அவதரித்து வாழ்ந்த இடத்திலேயே இப்போ பத்திரிகா தர்மம் நடக்கிறது. சிவனடியார்களாகிய இலக்கணசுவாமியார், சிவகாமித் தாயார் அவர்களின் பூஜா பலனால் "ஈழநாடு" நிலைத்து செழித்து வளர்ந்து வருகிறதென்பதற்கு ஐயமில்லை.

இலக்கணசுவாமியாரின் குருபூசை தினமாகிய இன்று அச்சிவனடியாரை ஞாபகத்தில் வைத்து போற்றி வணங்குவோமாக.

தங்கள்

செ. இரத்தினசபாபதி

## எம். ஜி. ஆர். மன்றம் ஆட்சேபம்

(மட்டக்களப்பு)

மட்டுநகரில் தமிழர் விடுதலைக் கூட்டணி அண்மையில் கூடிய செயற்குழுக் கூட்டத்தில் கோனவ மகேசன், ஈழவேந்தன் ஆகியோரை தற்காலிக நீக்கம் செய்ததைக் குறித்து மட்டுநகர் எம். ஜி. ஆர். மன்றத்தினர் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக மன்றச் செயலாளர் ஜீ. மனுவேல் விடுத்துள்ள அறிக்கையில் மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருக்கையில் தவறை சுட்டிக் காட்டிய போது இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இன்று இந்த நடவடிக்கை அவசியந்தானா? என்று கேட்டுள்ளார்.

......

## லொறி விபத்தில் சிறுவன்

(மாவிட்டபுரம்)

எருஏற்றிவந்த லொறியுடன் சைக்கிளில் வந்த 13 வயதுச் சிறுவன் ஒருவன் மோதியடிபட்டு ஆபத்தான நிலையில் யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

முல்லைத்தீவிலிருந்து எரு ஏற்றிவந்த லொறி அச்சுவேலியில் வந்துகொண்டிருந்தபோது வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பிலிப்குமார் என்னும் 13 வயதுச் சிறுவன் எதிர்பாராதவிதமாக லொறியினுள் அகப்பட்டுக்கொண்டதையடுத்து இரு கால்களும் துண்டிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான். இதுகுறித்து காங்கேசன்துறை பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் ஆர் ஜி பீரிஸ் ஸ்தல விசாரணை நடத்தி லொறிச் சாரதி சிவஞானம் நல்லநாதனை பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்து லொறியை பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர். விசாரணை தொடர்கிறது.

## தமிழக...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

வரையில்கூட இவர்கள் கூட்டு நிலைக்காதென்று மக்கள் நினைத்தனர். நல்லவேளை தி. மு. க-காங்கிரஸ்கட்சிகள் ஜெயித்தால் அடுத்த முதல்வர் கருணாநிதியே என்று இந்திரா வெளிப்படையாக அறிவித்து சண்டையைத் தீர்த்துவைத்தார்!

தி. மு. க. வினரும் காங்கிரஸாரும் தங்களது பிரச்சாரத்தை மிகவும் தீவிரமாக ஆரம்பித்து விட்டனர். மூன்று நாளைக்கு முன் அ. தி. மு. க மின் துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனை எதிர்த்து "அந்த பேர்வழி" என்னும் டாக்டர் தி. மு. க. சார்பில் போட்டியிடுகிறார். அவர் வேட்புமனு தாக்கல் செய்ய பண்ருட்டியிலிருந்து கடலூருக்கு 20 மைல் தூரம் ஊர்வலமாக வந்தார். கார் 50 கார்கள் லாறிகள் டிராக்டர்கள் முதலானவை நூற்றுக்கும் மேல் ஊர்வலத்தில் வந்தன. வேட்புமனுக்கொடுக்கவே இந்தக் கோலமென்றால் ஜெயித்தால்... இவர் என்ன செய்வாரோ தெரியாது.

இப்பொழுது ஒவ்வொரு ஊரிலும் தி.மு.க. வின் உற்சாகத்தைத் தான் காணமுடிகிறது. இதைப்பார்க்கும் போது நிச்சயம் தி. மு. க. காங்கிரஸ் கூட்டு மந்திரிசபை ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு என்றே தோன்றுகிறது. இதற்கிடையில் தமிழக மேல்சபைக்கு நடந்த 4 தொகுதி தேர்தலில் மூன்றை அ. தி. மு. க. பிடித்துள்ளதைப் பார்க்கும், போது அரசியல் நோக்கர்களை திகைத்துப் போயினர்.

எது எப்படியிருந்தாலும் எம். ஜி. ஆர். ஆட்சிப்பதவியைப் பிடிப்பது சற்று கடினம் என்றே தோறுகிறது. அப்படியே பதவிக்கு வந்தாலும் அவர் இந்திராவைப் பகைத்துக் கொண்டதால் 'தலைவலி' தான் அதிகமாக அமையும் என்று கூறுகின்றனர்.

அடுத்தபடி நிருபவர் கலைஞர் ஒருவர் தான் இவர் மீதும் பல ஊழல் புகார்கள் அப்படியே உள்ள இவரது ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்டு பல கோடி போய்களை விழுங்கிய வீராணம் திட்டம் இன்னும் கண்ணெதிரில் சாட்சியாக இருக்கிறது. ஆனாலும் இந்திராவுக்கு கிடைத்ததைப் போல அதிர்ஷ்ட லட்சுமியின் வாடை இவருக்கும் அடிக்கிறதா என்பதை பொறுத்துப் பார்க்க வேண்டும்.


## சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி80-

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் ரோட்டறிக் கழகம்

"சிறந்த நடாத்துநர், சிறந்த சாரதி" போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் "ஈழநாடு" பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடாத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் இம்மாதம் 25 ம் திகதி முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும்படி யாழ் ரோட்டறிக்கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

ரோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
பல் வைத்திய நிலையம்,
568 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் சிறந்த சாரதி பெயர்

................................. ................................

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர்-பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா.

(நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No..............)

அனுப்புபவர் பெயர்.............................ஒப்பம்..........

விலாசம்..................................................



குடும்பத்திலுள்ள அனைவருக்கும் தேவையானது!

ஒவ்வொரு இல்லங்களிலும் இருக்கவேண்டியது!!

தேமஸ்!!! THERMOS சகல அளவுகளிலும் இறக்குமதியாகியுள்ளது

## தேமஸ் பிளாஸ்குகள்

பிளாஸ்ரிக், தகர கொள்கலனுடையது

| | |
|---|---|
| அரை பைந் (பிளாஸ்ரிக்) பிளாஸ்குகள் | ரூபா 61 00 |
| ஒரு பைந் (பிளாஸ்ரிக்) பிளாஸ்குகள் | " 72 00 |
| ஒரு பைந் (தகரம்) பிளாஸ்குகள் | " 67-00 |
| இரண்டு பைந் (தகரம்) பிளாஸ்குகள் | " 95-00 |
| பிளாஸ்ரிக் ஜக் அமைப்பு பிளாஸ்குகள் | " 52-00 |
| குழந்தைகளுக்கான பிளாஸ்குகள் (போச்சி வைக்கக்கூடிய) | " 74-00 |

நீடித்த பாவனை!

அதிக ஒளிச்சக்தியுடையது!!

'றெட்ஹாட்' பெற்றோல்மக்ஸ்

சில்லறை விலை ரூ. 375-00

மொத்தமாகவும் — சில்லறையாகவும் கிடைக்கும் வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு

விரையுங்கள்!

## முகமதலி அப்துலலி

5, 7, பெரியகடை, யாழ்ப்பாணம்.

போன்: 515


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை உட்பட வெளிநாடுகளில் வாழும் தமிழரின் உரிமை நசுக்கப்படுவதைத் தடுக்க தி.மு.க. பாடுபடும்

## வானொலியில் அன்பழகன் உரை

சென்னை, மே 8

“இலங்கை உட்பட வெளி நாடுகளில் வாழும் தமிழர்களின் வாழ்வு பாதிக்கப்படாமலும், உரிமைகள் நசுக்கப்படாமலும் அவர்களுக்கு கொடுமைகள் இழைக்கப்படாமலும் தடுப்பதற்கு மத்திய அரசின் மூலம் திராவிட முன்னேற்றக் கழகம் எந்நாளும் வழிவகைகளைச் செய்யும்”

இவ்வாறு தி. மு. க. பொதுச்செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன் நேற்று முன்தினம் வானொலியில் நிகழ்த்திய தமிழக சட்ட சபைக்கான தேர்தல் பிரசார உரையில் குறிப்பிட்டார்.

### அண்ணா வழியில் தி. மு. க.

“மக்களின் தொண்டே மகேசன் தொண்டு என்னும் உணர்வோடும் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற உறுதியோடும் அறிவுலக மேதை அறிஞர் அண்ணா வழி நின்று அவர் வகுத்த கொள்கைக்காக போராடி வருகிறது தி மு க. 1977ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் அன்றைய அரசியல் நிலைக்கேற்ப அணி அமைந்தன. அடுத்து நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தி மு. க. தனித்து நின்று போட்டியிட்டு 42 லட்சம் வாக்குகளைப்பெற்று எதிர்க்கட்சியாகவும் அமர்ந்தது

### எம். ஜி. ஆர் ஆட்சியின் சீர்கேடுகள்

எம். ஜி. ஆரின் கடந்தகால ஆட்சியில் இடம்பெற்ற சீர்கேடுகளையும் முறைதவறுகளையும், முன்னுக்குப்பின் முரண்பாடான செயல்களையும், தொழிலாளர் உரிமை மறுக்கப்பட்டதையும் விவசாயிகளின் வேதனைகளை வளர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் எதிர்க்கட்சி என்றவகையில் தி மு க. சட்டமன்றத்தில் எடுத்துரைத்து நீதிக்காக குரல் கொடுத்துவந்ததை நாடு நன்கறியும்

## “மாநில சுயாட்சிக்கு தி.மு.க. தொடர்ந்து பாடுபடும்”

“அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் சட்டமன்றத்தில் மாற்றுக் கட்சியினர் எழுப்பிய கேள்விகளுக்கு உரிய பதில் கிடைக்கவில்லை. கூறப்பட்டகுற்றச்சாட்டுக்கள் தகுந்த சான்றுகளுடன் மறுக்கப்படவில்லை ஒன்றிரண்டு குற்றச்சாட்டுக்கள் மறுக்கப்பட்டு தகுந்த விளக்கம் கூறப்படாமல் முடிவில் மறுப்பினையே கைவிட்டனர். இப்படி ஏனோதானோ என்றவகையில் மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமைபற்றிய கருத்தற்ற காலம் கடத்தும் ஆட்சி நடைபெற்றது.

### தமிழ்நாடு பின்தங்கி நிற்கிறது

“நாட்டின் முன்னேற்றம் தடைப்பட்டதுடன் தொழில்துறை வளர்ச்சி பின்தள்ளப்பட்டு புதிய தொழில்துறை எதுவும் ஆரம்பிக்கப்படாமல் புதிய வேலைவாய்ப்பு எதுவும் ஏற்படுத்தப்படாமல் வளம் பெருகுவது நின்று வாழ்க்கைத் தரம் மங்கி வேலையில்லாதோர் தொகை பெருகி தமிழ்நாடு பின்தங்கி நிற்கிறது. இந்தியாவிலுள்ள மாநிலங்களின் வரிசையில் தொழில்வளத்தில் மூன்றும் இடத்தை வகித்த தமிழ்நாடு இன்று பதின்மூன்றும் இடத்திற்கு தள்ளப்பட்டுவிட்டது.

“மத்தியில் நடைபெற்று வந்த ஜனதா ஆட்சி கடந்த ஆண்டு நிலைகுலைந்து வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து பாராளுமன்றத்திற்கான தேர்தல் இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் பரந்து விரிந்த பாரதத்தின் முன்னேற்றத்திற்கு ஒரு குழப்பமற்றஆட்சி மத்தியில் ஏற்பட்டாகவேண்டுமென்பதை உணர்ந்த தி மு க அந்த ஆட்சியை வழங்கக்கூடிய ஒரே தலைவர் திருமதி இந்திராகாந்தியே என்று நாட்டுக்கு முதன்முதலாக அறிவித்து அவருக்கு ஆதரவளிக்க முன்வந்தது. இன்று சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் போதும் அதே முற்போக்குக் கூட்டணிக்கே ஆதரவு தந்து வெற்றிபெறச் செய்வர் என்பது எனது நம்பிக்கை.

### கருணாநிதியே தலைவர்

“தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்வுக்கும் வழிசெய்யவே தமது காங்கிரஸ் கட்சி தி. மு. க. வோடு கூட்டுச் சேர்ந்துள்ளது என்றும், தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதியே இந்த கூட்டு அரசின் தலைவராக இருப்பார் என்றும் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அறிவித்திருப்பது அவரது நல்லெண்ணத்தை மட்டுமன்றி தமிழக அரசியில் எப்படிப்பட்ட மாற்றத்தை அவர் விரும்புகிறார் என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

“நடைபெற்ற ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டுவிட்ட கேடுகளையும் குறைகளையும் களைந்திடவும் முற்போக்குத் திட்டங்களை செயற்படுத்தவும் கலைஞர் தலைமையில் அமையும் அரசு வழிகோலும் என உறுதியளிக்கிறேன்.

மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு மத்திய அரசின் ஒத்துழைப்புத் தேவை என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். அந்தமுறையில் மத்திய அரசிற்கும் மாநில ஆட்சிக்கும் நல்லுறவு வளர இந்தக் கூட்டணி ஆட்சி நல்லதொரு வாய்ப்பாகும்.

“தமிழக மக்களின் மொழி, கலை, பண்பாடு என்பவற்றைக் காப்பதிலும் இந்தி திணிப்பையும் மேலாதிக்கத்தையும் [illegible] தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளையும் மத்திய அரசின் ஆட்சி மொழியாக ஏற்கப்படுவதை வலியுறுத்துவதிலும் அந்தநாள் வரை பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் அளித்துள்ள உறுதிமொழியின்படியும் திருமதி காந்தி வழங்கிய வாக்குறுதியின்படியும் ஆங்கிலம் மத்திய ஆட்சிமொழியாக நீடிக்கவும், மாநிலங்கள் விரும்பும் காலம் வரை ஆங்கிலத்தை மத்திய மாநில தொடர்பு மொழியாக பயன்படுத்த உள்ள உரிமையை காத்திடுவதிலும் தி மு க என்றும் விழிப்போடு செயல்படும்.

“சமுதாயத்தில்வகுப்புவாத வெறி அகன்றிடவும் மூடநம்பிக்கைகளை களைந்திடவும் தீண்டாமைக் கொடுமை மறைந்திடவும் கழகம் பாடுபடும் உழைத்து உழைத்து உருக்குலைவோர் அவர் தம் உழைப்பின் பலனை பெற்றிடவும் கழகம் முயற்சிக்கும்

### மாநிலத்தில் சுயாட்சி

அரசியல்துறையில் பல்வேறு இன, மொழி, கலை, நாகரிகங் கொண்ட மக்களை உள்ளடக்கிய இந்தியாவால் மாநிலங்களின் தேவையை மக்களே உணர்ந்து செயல்படும்வகையில் மத்தியில் கூட்டாட்சியும் மாநிலத்தில் பயனுள்ளசுயாட்சியும் அரசியல் அமைப்பில் உருவாக்கிடவும் கழகம் தொடர்ந்து பாடுபடும்.

“மாநில அரசுகள் வளம் பெருக்கும் வாய்ப்புடைய சுயாட்சியுரிமை பெற்றவையாக இருந்து தொழிலும் வளமும் பெருகிடும் வல்லமையுள்ள நாடாக இந்தியா திகழும் என்பதே கழகத்தின் நம்பிக்கையாகும்.

“அறிவுலக மேதை அண்ணா அவர்களால் கழகத்திற்கென வகுக்கப்பட்ட கொள்கைகளையும் தொடர்ந்து வலியுறுத்தி அவற்றின் வெற்றிக்காக தி மு க. அயராது பாடுபடும். தமிழ் நாட்டு அரசியலில் நல்லதோர் திருப்பத்தை ஏற்படுத்தி மக்களை மதிக்கும் சிறந்ததோர் ஆட்சியை உருவாக்கி தெளிவான எதிர்காலத்தை அமைத்திட கூட்டணிக்கு ஆதரவு தாருங்கள். (கு)

---

## இந்திரா காங்கிரஸ் கமிட்டி மே 15ல் கூடுகிறது

[சென்னை]

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியின் புதிய நிர்வாகக்கமிட்டிக் கூட்டம் இம்மாதம் 15ம் திகதி சென்னையில் முதன் முதலாக நடைபெறும்.

இந்திரா காங்கிரஸ் தேர்தல் அறிக்கை பற்றி இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும். (இ)

---

## யூகோ. புதிய அதிபருடன் இந்திரா பேச்சுவார்த்தை

பெல்கிரேட், மே 8

யூகோஸ்லாவிய அதிபர் அமரர் மார்ஷல் டிட்டோவின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்ளும் பொருட்டு பெல்கிரேட் வந்துள்ள இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி யூகோஸ்லாவியாவின் தற்போதைய அதிபர் திரு கோலிசெவாஸ்கியைச் சந்தித்து மார்ஷல் டிட்டோவின் மறைவு குறித்து இந்தியமக்களின் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

திருமதி காந்தியும் திரு. செவாஸ்கியும் ஆப்கானிஸ்தான் விவகாரம் உட்பட பல சர்வதேச விவகாரங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பெல்கிரேட் வந்துள்ள மேற்கு ஜெர்மன் தலைவர் திரு. சிமித்தையும் திருமதி காந்தி சந்தித்து ஆப்கானிஸ்தான் நிலவரம் குறித்து பேச்சு நடத்தினர். (இ)

---

## 40தொன் யு.எஸ். யுரேனியம் இந்தியாவுக்குக் கிடைக்கும்

வாஷிங்டன், மே 8

இந்தியாவின் உள்ள தாராபூர் அணு உற்பத்தி ஆலைக்கு 40 தொன் யுரேனியத்தைக் கொடுக்க அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்ததும் இந்த யூரேனியம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படும் என வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஈரான் பணயக் கைதிகள் விவகாரம், ஆப்கானிஸ்தானில் சோவியத் தலையீடு ஆகியவற்றினால் தென் மேற்கு ஆசியாவில் எழுந்துள்ள நெருக்கடி நிலை காரணமாக இந்தியாவுடன் நல்ல உறவைக் கொண்டிருக்க அமெரிக்கா விரும்புவதாலேயே இத்தொகை யுரேனியம் வழங்கப்படுகிறது எனவும் அந்த அதிகாரி கூறினார். (இ)

---

## ஒலிம்பிக் பகிஷ்கரிப்புக்கு உண்மைக் காரணம் என்ன?

### பிரெஞ்சுப் பத்திரிகையாளர் விளக்கம்

பாரிஸ், மே 8

“மாஸ்கோ ஒலிம்பிக்குக்கான எதிர்ப்பு இன்று நேற்று தொடங்கியதல்ல. 1980 ஒலிம்பிக்ஸ் மாஸ்கோவில் நடைபெறும் என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி 1974ல் அறிவித்தது. அந்த முனைவே 1973ம் “மாஸ்கோவில் ஒலிம்பிக்ஸ் நடைபெற மாட்டாது” என்று அன்றைய ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்ஸன் அறிவித்து விட்டார்”

இவ்வாறு இங்கிருந்து வெளியாகும் “லா மானிட்” என்ற பிரெஞ்சுப் பத்திரிகையின் “ஒலிம்பிக் சாகவில்லை” என்ற தலைப்பில் மிச்சேல் சில்பெர்மன் என்பவர் எழுதிய கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“ஜனாதிபதி கார்ட்டரின் திட்டத்தின் கீழ் மாஸ்கோ ஒலிம்பிக்ஸில் கலந்துகொள்ள அமெரிக்க தேசிய ஒலிம்பிக் கமிட்டி மறுத்துள்ளது; அமெரிக்காவின் சொல்லைப் போக்குகளில் ஒன்றே ஆகும் நிகழ்வுகள் இந்த ஒரு சாட்டாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு, மேற்குலகத்தவல் சாதனங்களின் அனுசரணையாக இருந்துள்ளன. விளையாட்டு உலகில் அமெரிக்கா நீண்ட காலம் கொடிகட்டிப் பறந்தது ஆனால் கடந்த 30 ஆண்டுகளில் இந்த நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டன 1952ல் ஹெல்சிங்கியில் சோவியத் யூனியன் அடைந்த வெற்றிகள் இதற்குக் காரணமாயின தொடர்ந்து இதர சோஷலிஸ நாடுகளும், மூன்றாம் உலக நாடுகளும் உலக விளையாட்டியக்கத்தில் உச்சிக்கு ஏறிவிட்டன. 1896ல் ஏதென்ஸில் நடைபெற்ற முதலாவது நவீன ஒலிம்பிக்ஸில் 13 நாடுகள் பங்குபற்றின. இன்று அது தொகை 145 ஆகும். 1976ல் மொன்றியலில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸில் 11 சோஷலிஸ நாடுகள் 60 சதவீதமான பதக்கங்களை சுட்டிக்கொண்டன. இன்றைய கலவரிக்கும் போது, மேற்குலகம் ஒலிம்பிக் கோட்பாடுகளை நிராகரிக்கவும், அமெரிக்காவும் இதர சில நாடுகளும் மாஸ்கோ ஒலிம்பிக்ஸில் கலந்துகொள்ளாதிருக்கவும் முடிவு செய்ததன் காரணங்கள் விளங்குகின்றன அல்லவா?” என்று எழுதும் இப்பிரெஞ்சுப் பத்திரிகையாளர், மாஸ்கோ ஒலிம்பிக்ஸ் மிக வெற்றிகரமாக நடைபெறுமென்று நம்பிக்கை தெரிவிக்கிறார்.

---

ஆயுதக்கடத்தலை முறியடிக்க முயன்ற

## பொலிசாரின் துப்பாக்கிக்கு பாதசாரியொருவர் பலி!

(கொழும்பு)

பயங்கர ஆயுதங்களுடன் விரைந்துகொண்டிருந்ததாகக் கருதப்பட்ட காரை நோக்கி பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது அவ்வழியே சென்றுகொண்டிருந்த பாதசாரி ஒருவர் பலியானார்.

பயங்கர ஆயுதங்களுடன் கொழும்பை நோக்கி கார் ஒன்று செல்வதாகக் கிடைத்த தகவலை அடுத்து கடவத்தைப் பொலிசார் கண்டி வீதி 13-வது மைல் கல்லுக்கு அண்மையில் வாகனங்களை நிறுத்தி சோதனையிட்ட சமயம் கார் ஒன்றை நிறுத்துமாறு உத்தரவிட்டபோது நிறுத்தப்படாது காரிலிருந்து பொலிசாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாம்

இதனையடுத்து கார் வேறு வழியில் திரும்பி கம்பஹாவை நோக்கிச்சென்றபோது பொலிசார் காரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோதிலும் காரை நிறுத்த முடியவில்லையாம்

இச்சம்பவத்தில் பலியான நபர் இ. போ. ச. ஊழியர் என்பது பின்னர் தெரிய வந்தது. (இ)

---

## சிறிமாவோ பெல்கிரேட் பயணமானார்

[கொழும்பு]

மறைந்த யூகோஸ்லாவியத் தலைவர் மார்ஷல் டிட்டோவின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொள்ளும்பொருட்டு முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றிரவு பெல்கிரேட் பயணமானார் (ம-கு)

---

## புதிதாக 1250 கி.சே. அலுவலர்

(கொழும்பு)

புதிதாக 1250 கிராமசேவை அலுவலர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

ஒவ்வொரு பிரிவிற்கும் இரண்டு அலுவலர் என்ற அடிப்படையில் இந்நியமனங்கள் செய்யப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராஜ்கமல்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
ஸ்ரீகாந்த் - சுஜாதா
**தீபம்**
(கலர் - புதியபிரதி)

**வெலிங்டன்**... (யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 3-30
ராஜன் - பிரமிளா
**வீட்டு மாப்பிள்ளை**

## ஒரு கோடி செலவில் புற்று நோய் கழகம்

(சென்னை)

காஞ்சிபுரத்தில் ஒரு கோடி ரூபா செலவில் புற்று நோய் கழகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியுடன் நிறுவப்பட்ட இக்கழகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இக்கழகத்தில் புற்றுநோய் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதுடன் புற்றுநோயாளருக்கும் சிகிச்சை அளிக்கப்படும். (இ)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30 6-30, 9-30
சிவாஜி-சரோஜாதேவி- எம். ஆர். ராதா நடித்த
**பாகப் பிரிவினை**

**வின்ஸர்** (யாழ். நகர்) போன்: 7898
தினசரி 4 காட்சிகள்
**மரகதம்** (புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராஜ்கலா-... சிவலிங்கம்-... ராஜேந்திரன்-T. R. ஸ்ரீ ... நடித்த
**ரத்தத்தின் ரத்தமே**
(வண்ணக்கலர்)
டைரக்ஷன் : ஜோ தேவ் ஆனந்த்

**வின்ஸர்** தொலைபேசி: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
தினசரி 10-15, ..., 4-10, 7-15 10-00
சுதாகர் ராதிகா-விஜயன்-ரதி நடிப்பில் உருவான
**நிறம் மாறாத பூக்கள்**
(வண்ணச்சித்திரம்)

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
**அவள் ஒரு தொடர்கதை**
Coming soon
**The Living Desert**

**ராணி** (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
10-30. 1-00, 4-00, 7-00, & 9-45
இந்தியாவில் தொடர்ந்து 200 நாட்கள் ஓடி வெள்ளிவிழா சாதனை ஏற்படுத்தியது
★ கமலஹாசன் (இருவேடங்களில்)
★ ஸ்ரீதேவி மற்றும்பலர் நடித்த
**கல்யாண ராமன்** (கலர்)
தொடர்ந்து கொட்டகை நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுவதால், ரிக்கற்றுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
விஜயா
நாகேஷ்
**திருடன்**
(புதிய பிரதி)

**SANTHI** JAFFNA Phone 7642
Today Only Daily 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
THE LOVE AND TIMES OF
**SCARAMOUCHE**
10-5-80
**"Marathon Man"** A THRILLER —COLOR—

'நொதேர்ண் ஸ்போட்ஸ்' ஆதரவிலான

# 'ஈழநாடு' வெற்றிக்கிண்ண கிரிக்கட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

"நொதேர்ண் ஸ்போட்ஸ்" சஞ்சிகையின் ஆதரவில் 'ஈழநாடு' வெற்றிக்கிண்ணத்திற்காக நடாத்தப்படும் மென் பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி இம்மாதம் 24-ம் திகதி நல்லூரில் ஆரம்பமாகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ள இச்சுற்றுப் போட்டியில் வெற்றி பெறும் கழகங்கள் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர் சிறந்த பந்து பிடிப்பவர் சகல துறைகளிலும் சிறந்த வீரர் ஆகியோருக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

16 வயதுக்குட்பட்டோரது போட்டிக்கு 11 பேர் கொண்ட கோஷ்டியும், 16 வயதுக்கு மேற்பட்டோரது போட்டிக்கு 11 பேர் கொண்ட கோஷ்டியும் பங்குபற்றக் கூடியதாக விளையாட்டுக் கழகங்கள் விண்ணப்பிக்கலாம்.

விரும்பும் கழகங்கள் "நொர்தேர்ண் ஸ்போட்ஸ் ஆசிரியர் 338 பருத்தித்துறை வீதி நல்லூர் என்ற முகவரிக்கு இம்மாதம் 20-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கலாம் என்று நொதேர்ண் ஸ்போட்ஸ் சஞ்சிகையின் ஆசிரியர் திரு. இ. இராஜேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

16 வயதிற்கு மேற்பட்ட பிரிவுச் சாம்பியனுக்கு ஈழநாடு வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.

16 வயதிற்குட்பட்ட பிரிவுச் சாம்பியனுக்கு யாழ்ப்பாணம் "செல்வா சிவபாதலிங்கம்" நினைவு மாளிகையால் வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.

இச்சுற்றுப் போட்டியில் வெற்றி பெறும் வீரர்களுக்குப் பரிசுகளை வழங்க கே. ஜெபாலசிங்கம் சிப்பிங் ஏஜண்ட் மங்கேசன்துறை, கே. என். எம். மீரான் சாகிப், யாழ்ப்பாணம், புரோபோட்டேர்ஸ் என்ஜினியரிங் கோப்டனர் லிமிட்டெட் நல்லூர், அக்ரேஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம், ஓட்டோஸ் லிமிட்டெட் யாழ்ப்பாணம், மகிஜெனன் டிரவல் சேர்விஸ் இலங்கை லிமிட்டெட் யாழ்ப்பாணம், யாழ். கேம்பிறிட்ச் கல்வி நிலையம், யாழ். விக்னு டியூஷன் சென்ரர், ரேடியோ மனுவேல் யாழ்ப்பாணம், டிவ்கா வார்ச்வேக்ஸ் யாழ்ப்பாணம், டாஸ் மார்க்கட்டிங் சேர்விசஸ், யாழ்ப்பாணம் மற்றும் பல வர்த்தக ஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன. (...)

## இன்றைய பலன்

சித்திரை மாதம் 27-ம் திகதி (9-5-80) வெள்ளிக்கிழமை

**மேடம்:** ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழிகளில் இறங்கவேண்டாம், வீட்டில் சிறுபிணி தலைதூக்கும், சிறிய விடயத்துக்குக் கூட பெரிய கோபம் தோன்றக் கூடும்.

**இடபம்:** ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும், வாகனத்தின்மூலம் அதிக பொருள்வரவுக்கு இடமுண்டு, விளைபொருள் விருத்தியும் வியாபார முன்னேற்றமும் ஏற்படும், நல்ல நாள்.

**மிதுனம்:** உறவினர்களின் கருணை உங்களுக்கு உவகையைத் தரும், சுற்றுவட்டாரத்தில் மதிப்பு உயரும், குடும்பத்தில் கணவன் மனைவி உறவு மிகவும் சுமுகமாக இருக்கும், பரவசமூட்டும் நாள்.

**கடகம்:** பகைமூட்டப் பட்டமிடும், வீணான வார்த்தைகளால் மனம் புண்படும், தொழில்துறையில் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும், கடிதமொன்று கவலையைத் தரலாம், மனத்திடம் வேண்டும்.

**சிம்மம்:** களிவான சம்பவங்கள் நடைபெறும், காதலர்களுக்கு கனகுஷியான தினம், தாம்பத்திய வாழ்க்கையில் பிணை புக்கள் மேலும் பலப்படுத்தப்படும், சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறும்.

**கன்னி:** அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர், சிலர் வாழ்க்கையில் பொருள் முடையும் ஏற்படலாம், நண்பர்களால் தொல்லைகள் தோன்றக்கூடும், திட்டமிட்டுச் செயலாற்றவும்.

**துலாம்:** நீண்டநாள் பிரச்சினையில் இன்று சமரச முடிவு காணப்படும் மற்றவர்கள் மத்தியில் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்வீர்கள், அரசியல் சிலருக்கு ஆர்வம் பிறக்கக் கூடும்.

**விருச்சிகம்:** முயற்சியால் உயர்ச்சி உண்டு, பண விவகாரங்களில் நல்ல திருப்பங்கள் ஏற்படும், வெளியிடத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கும், வீட்டில் சுபகாரியங்கள் நடைபெறும், சுபயோகநாள்.

**தனுசு:** வாழ்க்கையில் புதிய உற்சாகம் பிறக்கும் கருத்து வேற்றுமைகள் மறையும், பல வழிகளிலும் பொருள் வரவுக்கு இடமுண்டு, சிலர் வாழ்க்கையில் நீண்டநாள் பிணி இன்று நிவர்த்தியாகும்.

**மகரம்:** சிறிய விடயத்துக்குக்கூட அதிக ஆத்திரம் ஏற்படலாம், பல வழிகளிலும் பணம் செலவாகும், நண்பர் ஒருவர் உம்மை ஏமாற்றுவதற்கு முனைவர். சிலர் அவப்பெயருக்கும் இலக்காகலாம்.

**கும்பம்:** பண விவகாரத்தில் அதிக கவனம் செலுத்தவும், தொழில்துறையில் சில சிக்கல்கள் தோன்றக்கூடும், எந்த விடயத்திலும் பொதுவாக ஒரு தடுமாற்றம் தென்படும், நாவடக்கம் மிகவும் விரும்பத்தக்கது.

**மீனம்:** நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படுகின்றது, நீண்ட நாள் கடன்தொல்லை இன்று நிவர்த்தியாகும், கணவன் மனைவி உறவு முறைகள் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் சுபதினம்.

சோதிடக் கலாநிதி
இருவில
க. வேலுப்பிள்ளை

**ஹரன்** ... யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சாவித்திரி
எஸ்.எஸ். ஆர்.-வித்யா
நடித்த
...
(புதிய பிரதி)

## வங்கிக் கிளை மீண்டும் திறக்கப்படும்

(பண்டத்தரிப்பு)

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற வங்கிக் கொள்ளையையடுத்து மூடப்பட்ட மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை இம்மாதம் 15ம் திகதி மீண்டும் திறந்து வைக்கப்படவுள்ளது.

மானிப்பாய் பட்டின சபைக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் திறக்கப்படவுள்ள இந்த வங்கியின் புனரமைப்பு வேலைகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

## தேவார வகுப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி திவ்ய ஜீவன சங்கத்தின் ஆதரவில் சாவகச்சேரி முருகன் ஆலய மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் தேவார வகுப்பு நடைபெற்று வருகிறது. இவ்வகுப்பை பண்ணிசைச் செல்வன் இரா திருஞானசம்பந்தன் நடாத்தி வருகிறார். (ச)

## விசேட இளைஞர் பேரவை செயற்குழு 11ல் கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

இளைஞர் பேரவையின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள பேரவையின் பணிமனையில் நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் திரு. வாசுதேவா தலைமையில் நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தில் முக்கிய அரசியல் பிரச்சனைகள் பற்றி ஆராயப்படவுள்ளன.

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலுமிருந்தும் செயற்குழு உறுப்பினர் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (கொ)

## பதவி வெற்றிடம்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்திற்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 972-5-12ம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள தகமைகள் உடையவர்கள் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை ரூபா 1/- செலுத்திப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஏனைய விபரங்களைப் பெற விரும்புவோர் சங்க காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி 1980-05-31.

1 கணக்காளர் தரம் 11- பதவி 1-நிரந்தரம்.

2 கணக்குப்பதிவாளர் தரம் 11 பதவி 1-நிரந்தரம்.

பொது முகாமையாளர்.
தெல்லிப்பழை,
ப. நோ. கூ. சங்கம்.
1980-05-09 5704

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...



டில்கா வாச்வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல்மாடி.
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



ஈழநாடு 50 சதம்
The EELANAADU


## அமிர்-ஈழவேந்தன் ஒரே மேடையில்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி யின் அச்சுவேலிக் கிளை நடத்தும் தந்தை செல்வா நினைவு தினக் கூட்டம் நாளை மாலை வல்லை வீதியில் திரு. பா. க. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட திருவாளர்கள் கோவை மகேசன், ஈழவேந்தன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (வெ)


NEW CAMBRIDGE
திருநெல்வேலிச்சந்தி, மேல்மாடி, யாழ்ப்பாணம்
ஆரம்பம் 14-5-80
● RADIO & ELECTRONIC WITH PRACTICAL
● SHORTHAND & TYPING
காலை, மாலை, சனி, ஞாயிறு வகுப்புக்கள்.
● I. B. K. I. A. A. LONDON EXAM.
● ADVANCED & SPOKEN ENGLISH,
பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.
மேலதிக விபரங்கட்கு:
V. M. PACKKIYANATHAN


### ரியூட்டரி மாணவி கொலை

# சந்தேக நபர்கள்மீது இன்று வழக்குத் தாக்கல்

(புலோலி)

பொலிகண்டி ரியூட்டரி மாணவி கொலைச் சந்தேக நபர்கள் இருவர் மீதும் இன்று கொலைக்குற்றச் சாட்டின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சந்திரா குணரத்தின நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் கூறினார்.

சந்தேக நபர்களான ராஜ்குமார் (ராஜன் அல்லது வீரப்பன்), வென்சியஸ் பெர்னாண்டோ ஆகிய இருவரும் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் பதில் மாஜிஸ்திரேட் திரு. நாகராஜா முன் பலத்த பாதுகாப்புடன் கொண்டுவந்து ஆஜர் செய்யப்பட்டனர்.

இன்று வழக்குத் தாக்கல் செய்யப்படும் என பொலிஸ் பொறுப்பதிகாரி கூறியதை அடுத்து இரு சந்தேகநபர்களையும் இன்று தம்முன் ஆஜர் செய்யுமாறு மாஜிஸ்ரேட் உத்தரவிட்டார். (இ)

## கொலைக் குற்றத்தை ஏற்கச்செய்யும் பேரம்?

### சந்தேகநபர்கள் இருவரும் ஆஜர்செய்யப்பட்டனர்

(புலோலி)

பொலிகண்டி ரியூட்டரி மாணவி கொலையை முதலாவது சந்தேகநபரான ராஜனை ஏற்கச் செய்தால் 5 ஆயிரம் ரூபா தருவதாக 2-வது சந்தேக நபரான பெர்னாண்டோவின் தந்தை ராஜனின் மாமனாரைக் கேட்டார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக கடந்த தவணையின் போது பிணையில் விடப்பட்டிருந்த இருவரையும் மீண்டும் இம்மாதம் 20-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும் படி பதில் மாஜிஸ்ரேட் திரு. நாகராஜா உத்தரவிட்டுள்ளார்.

ராஜனின் மனைவியின் தகப்பனான தங்கராஜாவிடம் 5 ஆயிரம் ரூபா பேரம் பேசியதாக பொலிசாரால் கைது செய்யப்பட்ட 2-வது சந்தேக நபரின் தந்தையாரான ஞானசேகரம் பீற்றர் பெர்னாண்டோ முத்துராஜா ஆகியோர் கடந்த தவணையின் போது தலா ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது தெரிந்ததே.

சந்தேக நபர்களான பொன் சியஸ் பெர்னாண்டோ, ஞானசேகரம் பெர்னாண்டோ முத்துராஜா ஆகியோர் சார்பில் சட்டத்தரணிகள் திருவாளர்கள் சிறிசிவாய, ஆர். டி. இரத்தினசிங்கம் என். கிருஷ்ணராஜா ஆகியோர் ஆஜரானார்கள். (இ)

## அப்பர்சுவாமி குருபூசை

(யாழ்ப்பாணம்)

அப்பர் சுவாமிகள் குருபூசைத்தினம் இன்று யாழ். திருமறை மன்றத்தினரால் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

திருவருகமாலை பிரசுரமும் இலவசமாக வழங்கப்படும்.

## மட்டக்களப்பு வளாகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வந்தாறுமூலை பல்கலைக் கழக வளாகம் அக்டோபர் மாதம் 19ம் திகதி திறந்து வைக்கப்படும்.

## கிருமிநாசினி தெளித்தவர் மரணம்

(மாவிட்டபுரம்)

தோட்டத்திற்குக் கிருமிநாசினி தெளித்துவிட்டுச் சிறிது நேரத்தில் பப்பாசிப் பழமும் பாணும் சாப்பிட்டவர் வாந்திஎடுத்துமரணத்தை தழுவிக்கொண்டார்.

ஏழாலையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சதானந்தன் (19 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா இம்மரணம் குறித்து விசாரணை செய்த சமயம் காலமானவர் தோட்டத்தில் பயிர்களுக்குக் கிருமிநாசினி தெளித்த பின்னர் வீட்டுக்கு வந்துபப்பாசிப்பழமும்பாணும் சாப்பிட்டதாகவும், அதனையடுத்து வாந்தியெடுக்கவே தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்கு அவர் மரணமானதாகவும் சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டது.

கிருமிநாசினியை அதிகமாக சுவாசித்தமையால் ஏற்பட்ட விபத்து மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். (அ)

## பளை வங்கி மோசடி வழக்கு: விசாரணைகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பளை வங்கி மோசடி வழக்கு யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜஸ்ரிஸ் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, செப்டம்பர் 22ம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் 75 ஜனவரி 16ந் திகதிக்கும் அக்டோபர் 23ந் திகதிக்குமிடையில் பளை கமத்தொழிற் சேவை நிலையத்தின் இலங்கை வங்கியில் 150,362 ரூபா 10 சதத்தை மோசடி செய்ததாக எஸ். ராசரத்தினம், .. பர்வதராசா ஆகியோர் மீது 8 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

எதிரிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி பி. நவரத்தினராசா கியூ. சி., சட்டத்தரணி ஆர். தவராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார். அரச தரப்பில் அரச சட்டத்தரணி பீ. அரவிந்தன் ஆஜரானார். (க-கு)

### சட்டவிரோதசைக்கிள் சவாரி:

## பாடசாலை மாணவர்களுக்கு யாழ். நீதிபதி அறிவுரை

(யாழ்ப்பாணம்)

சட்டத்தை மீறி சைக்கிளில் செல்லும் மாணவர்கள் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் அரச உத்தியோகத்தை நம்பியிருக்கும் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் என யாழ் நீதவான் .. யோகநாதன் அறிவுரை கூறியுள்ளார்.

கல்லூரி அதிபர்களுக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கும் யாழ் நீதவான் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

"மாணவர்கள் வெளிச்சமில்லாமலும், மணி பிரேக் இல்லாமலும் இரவு நேரங்களில் ஒரேவழிப்பாதையால் சட்டத்திற்கு முரணாக வீதிகளில் பக்கம் பக்கமாகவும் இறைவரி தகடில்லாமலும் சைக்கிளில் செல்கின்றார்கள்.

இத்தகைய செய்கை நீதிமன்றங்களில் தண்டிக்கப்படும் குற்றச் செயலாகும். இதுவரை மாணவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் அவர்கள்குற்றம் புரிந்திருந்தாலும் குற்றவாளிகளென தீர்க்கப்படாமல் எச்சரிக்கை செய்து விடுதலைசெய்யப்பட்டுள்ளார்கள். இனிமேல் மாணவர்கள் தொடர்ந்து இக்குற்றச் செயலைப் புரிந்தால் அவர்கள் நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக காணப்பட்டு அவர்களுக்கு எதிராக தண்டம் விதிக்கப்படும். இது அரசாங்க உத்தியோகத்தை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு உகந்ததல்ல என்பதை மாணவர்களுக்கு அவர்களின் நன்மையை முன்னிட்டு தருந்த அறிவுரை வழங்குகிறேன்.

### அடையாள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடையாள அணிவகுப்பு பயனற்றதாகிவிடும் என்றும் பதில் நீதவானின் கவனத்திற்கு கொண்டுவந்து அடையாள அணிவகுப்பை ஒத்திபோடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம், கே. வி. எஸ். சண்முகநாதன், ரி. சோமசுந்தரம், பி. கனகசபாபதி ஆகியோரும் ஆட்சேபித்தனர்.

நீதிமன்றத்திற்குள் நின்ற 39 பேர்களிடம் அவர்கள் எவ்விடத்தைச்சேர்ந்தவர்கள்? என பதில் நீதவான் கேட்டபோது மண்டைதீவைச் சேர்ந்தவர்கள் என பதிலளித்தார்கள்.

பதில் நீதவான் அடையாள அணிவகுப்பை இம்மாதம் 27 ம் திகதிக்கு ஒத்திவைத்து, அடுத்த அடையாள அணிவகுப்பில் மண்டைதீவைச் சேர்ந்தவர்கள் எவரும் இருக்கக்கூடாது என பொலிஸ் உத்தியோகத்தருக்கு பணித்தார்.

நான்கு சந்தேக நபர்களும் மூடிமறைக்கப்பட்டு கொண்டுவரப்பட்டபோதும் நீதிமன்றத்திற்குள் கொண்டுவரப்படவில்லை. 5 சாட்சிகளும் வந்திருந்தனர். (க-கு)

## அரங்கேற்றம்

(கொழும்பு)

செல்வி ரதிகா விவேகானந்தனின் மாணவியான செல்வி கீதா பாலசிங்கத்தின் குச்சுப்புடி நாட்டிய அரங்கேற்றம் இன்று மாலை கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும்.

திரு. வெம்பட்டி சின்னசத்தியம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வரங்கேற்றமே ஈழத்தில் நடைபெறும் முதலாவது குச்சுப்புடி நடன அரங்கேற்றம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-கு)

## பதவியேற்றார்

வாஷிங்டன், மே 8

அமெரிக்காவின் புதிய வெளிநாட்டமைச்சர் செனட்டர் எட்மன் மஸ்கி இன்று பதவிப்பிரமாணம் செய்து தமது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (கு)


மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
6, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! - பொறுப்பு எங்களது!



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மே 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office Sri Lanka under No. CE/8948/ 78. The Eelanaadu, Post Box No. 49, Telegram: "Eelanaadu, Phone: 389


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org